தமிழ் முரசு

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்.

1951 - ஏப்ரல்

சிலப்பதிகார மலர்.

விலை 4 அணா

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

4

தொகுதி 6 : : சென்னை 1951 ஏப்ரல் : : பகுதி 12

பொருளடக்கம்

●

கண்ணகியைப் பழிக்கும் கருஞ்சட்டைத் தலைவர்! 2
பூம்புகார் மாநாடு 8
உண்மை வெளிப்படுகிறது 9
நாட்டு நடப்பு 11
சிலம்பொலிக்கு எதிரொலி .... 'வண்டு' 13
கண்ணகி பந்தலில் சிலப்பதிகார மாநாடு 17
அரசியலும் இலக்கியமும் .... ம. பொ. சி. 28
வாழ வழிகாட்டும் இலக்கியம் .... டாக்டர் மு. வ. 32
ஔவை சண்முகத்தின் அற்புத நடிப்பு 36
தமிழகம் தனியரசு நாடாகவேண்டும் 37
அட்டைப்பட விளக்கம் 38
மதிப்புரை 39
எது வேண்டும் சொல் தமிழா! (பாடல்) கு. சா. கி. 40

அறிவிப்பு

தமிழரசா? திராவிடஸ்தானா? என்ற தலைப்பில் எழுதப்பட்டுவரும் தொடர் கட்டுரை அடுத்த இதழிலிருந்து வெளிவரும்.

ஆசிரியர்.

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1982 பங்குனி - சித்திரை

கண்ணகியைப் பழிக்கும் கருஞ்சட்டைத் தலைவர்!

சிலப்பதிகாரத்திற்கு சிறப்பு தேட தேசீய வாதிகள் மாநாடு கூட்டுகிறார்கள் என்ற செய்தி கேட்டவுடனே, திராவிடக் கழக வட்டாரத்தில் கலக்கங் கண்டுவிட்டது. காங்கிரஸ்காரர்கள் என்றாலே, வடமொழிக்கும் வடவருக்கும் அடிமைப் பட்டவர்கள், தமிழுக்கும் தமிழருக்கும் துரோகம் செய்பவர்கள் என்று இத்தனை காலமும் செய்துவந்த பிரச்சாரமெல்லாம், பொய்யாய்-கனவாய்ப்-பழங்கதையாய்ப் போய்விடுமே என்பதுதான் கலக்கத்திற்குக் காரணம். ஆகவே, சிலப்பதிகார மாநாடு நடக்குமுன்பே, சிலம்பின் பெருமைபற்றி 'விடுதலை' பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டது. திராவிட கழகத்தின் இலக்கிய பிரசாரகரான புலவர் இலக்குவனார், ஆம்பூரில் சிலப்பதிகாரத்தின் சிறப்புபற்றி சொற்பொழிவாற்றினார். அதை, 15-3-51 ல் 'சிலப்பதிகாரத்தின் பெருமை' என்ற தலைப்பு கொடுத்துப் பிரசுரித்தது 'விடுதலை'. 21-3-51 இதழில், சாமி சிதம்பரனாரைக்கொண்டு சிலப்பதிகாரத்தைப்பற்றி மிக நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை எழுதச் செய்து அதையும் பிரசுரித்தது விடுதலை. இவற்றால் நாம் மருளவில்லை; மகிழ்ந்தோம். சிலம்பைப் பழித்தவர்களும் அதன் சிறப்பை உணர்ந்து பாராட்டுவதென்றால், மகிழத்தானே வேண்டும்! மொழித் தொண்டு கட்சிப் பூசல்களுக்கு அப்பாற்பட்டதல்லவா?

ஆனால் ஈ. வெ. ரா., இத்தனைக்கும் எதிர்மாறான போக்கிலே 30-3-51ல் காங்கேயத்தில் சிலப்பதிகாரத்தைப் பழித்துப் பேசியிருக்கிறார்.

"உண்மையான திராவிடன்-தமிழ் மகனாக இருந்தால், சிலப்பதிகார மாநாடு நடத்துவானா? பார்ப்பனர்களுக்கு நல்ல

பிள்ளையாக நடந்துகொள்வதற்கு ஆக நடத்தப்படுவது என்பதல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?''

என்று, சிலப்பதிகார மாநாடு நடத்தியவர்களுக்கு 'சிறப்புரை' வழங்கியிருக்கிறார் ஈ. வெ. ரா. அவர் கருத்துப்படி, சிலப்பதிகார மாநாடு நடத்துவோர், அந்தக் காவியத்தின் சிறப்புபற்றி பேசுவோர் அத்தனை பேரும் போலித் தமிழர்களாகின்றனர். இதற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பைப் புலவர் பெருமக்களுக்கு விட்டுவிடுகிறோம்.

''சிலப்பதிகாரமென்பது ஆரியத்தைப் பரப்புகிற ஒரு நூலென்பது அல்லாமல் வேறு என்ன? ஆரம்பமுதல் இறுதி வரையில் ஒரே ஆரியந்தானே காட்சியளிக்கிறது?''

என்கிறார் ஈ. வெ. ரா. 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்கள். அதுபோல, எப்போதோ-எதற்காகவோ 'ஆரிய'த்தின் மீது வெறுப்பேற்பட்டதன் காரணமாக, காண்பதெல்லாம் 'ஆரிய'மாகக் காட்சியளிக்கிறது ஈ. வெ. ரா.வுக்கு!

கொடுங்கோலனை எதிர்த்துப் போராடும் கண்ணகியின் புரட்சி 'ஆரியம்!' அறியாது செய்த பிழைக்கு, தனது உயிரையே அர்ப்பணிக்கும் நெடுஞ்செழியனின் தியாகம் 'ஆரியம்!' அரசன் உயிர்நீத்த அக்கணமே தானும் உயிர் நீத்த கோப்பெருந் தேவியின் அன்பு நிறைந்த காதல் 'ஆரியம்!' வாய் கொழுத்துப் பேசிய வடவேந்தருடன் போரிட்டு தமிழரின் ஆற்றலைப் புலப்படுத்திய செங்குட்டுவன் செயல் 'ஆரியம்!' மூன்றாகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தை ஒன்றாகப் பிணைத்துக் காட்டிய இளங்கோவின் சித்திரம் 'ஆரியம்!'

விலை மகளுக்குப் பிறந்தும் ஒருவனையே காதலித்து வாழ்ந்து, அவன் இறந்தபிறகு வாழ்விற்குரிய இன்பங்கள் அனைத்தையும் இழந்துவிட்ட மாதவியின் மனப்பண்பு 'ஆரியம்!' பார்ப்பனத் தோழியின் கருத்துவழி காமன் கோயில் சென்று வழிபட மறுத்த கண்ணகியின் செயல் 'ஆரியம்!'

இத்தனையும் தமிழ்ப் பண்பிற்கு எதிரான 'ஆரியப் பண்பு'தான் என்றால், அந்த ஆரியப் பண்பு நீடூழி வாழ்வதாகுக!

ஈ. வெ. ரா., தமிழ்ப் பண்பைப் பற்றி முதலில் யாரிடமேனும் பாடங் கற்றுக்கொள்ளட்டும்; அப்புறம் அதைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினால் அவருக்கும் நன்மையுண்டு; நாட்டிற்கும் நன்மையுண்டு.

''கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடக்கிற கல்யாணம்.........பெண்ணடிமைத் திருமணம். அடுத்தபடியாக அது பணமூட்டைகள் திருமணம்!''

என்கிறார் ஈ. வெ. ரா. எங்கோ-யாரோ செய்துகொண்ட திருமணத்தை நினைப்பிலே வைத்துக்கொண்டு கண்ணகியின் திரு

மணத்தை கண்டித்துப் பேசியிருக்கிறார் போலும்! உணர்ச்சிக்காக அல்லாமல் - கடமைக்காகவுமல்லாமல், வெறும் உடைமைக்காக மட்டும் திருமணம் செய்துகொண்ட பெண் அல்லள் கண்ணகி; கண்ணகியின் காதலன் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன்தான். ஆனால், அவனுடைய பணத்துக்காக, தனது இளமையை அடகுவைக்கும் அறிவுகெட்டநிலை கண்ணகிக்கு இருந்ததில்லை. கண்ணகி, பருவங்கடந்து பழுதுபட்டவளுமல்லள்; கோவலனும் எழுபது வயது கிழவனல்லன். இருவரும் இளமையின்பம் துய்ப்பதற்கான இளம் பருவத்தினர். மகளென இருந்தவளை, அவளது விருப்பமறியாமலே திருமணப் பதிவுப் பத்திரத்தில் கையொப்பம் பெற்று மனைவியாக்கிக் கொள்ளும் கொடுமையைப் பார்த்திருக்கிறோம். அதுபோன்ற அடிமைத்தனத்தில் கண்ணகியை வைத்து கோவலன் மணம் செய்துகொள்ளவில்லை.

பார்ப்பனப் புரோகிதர், மறைவழிப்படி நடத்தி வைத்ததற்காக, அவர்களுடைய திருமணத்தைப் பழிப்பது ஆராய்ச்சி அறிவன்று - ஆபாசக் கூக்குரல்.

> "கண்ணகி என்று கூறப்பட்டிருக்கிற பெண்ணுக்கு சிறிதாவது அறிவு - மனித உணர்ச்சி - தன்மானம் இருந்தது என்று யாராவது ஒப்புக்கொள்ள முடியுமா?"

என்று கம்பீரமாகக் கேள்வி போடுகிறார் ஈ. வெ. ரா.

முதலில் தந்தையாக உறவுகொண்டு, பிறகு அவரையே கணவனாகக் காதலிக்கும் பெண், அறிவுக்குப் புறம்பானவள்தான்! உணர்ச்சிக்காக அல்லாமல், உடைமைக்காக முதுமையைக் 'காதலிக்கும்' பெண், மனித உணர்ச்சி அற்றவள்தான்! ஊரார் பழிக்கும் நிலைமையிலும், உணர்ச்சியற்ற கட்டையாக கிழத்தோடு பவனிவரும் பெண், தன்மான மற்றவள்தான்!

இந்தக் குறைபாடுகள் அனைத்துங் கொண்ட ஒரு பெண்ணை ஈ. வெ. ரா. எப்போதோ-எங்கேயோ சந்தித்துவிட்டார் போலும்! அவளை நினைவில் வைத்துக்கொண்டு கண்ணகியைச் சாடுகிறார்.

கண்ணகிக்கு அறிவு இருந்ததால்தான் கணவனைப் பிரிந்த காலத்திலும் கற்புநெறி தவறாது வாழ்ந்தாள்.

மனித உணர்ச்சி இருந்ததனால்தான், ஆயர்சேரியில் கோவலன் தன்னை இறுதியாகப் பிரியும் போது, அவனது போற்றா ஒழுக்கத்தை எடுத்துக் காட்டி இடித்துக் கூறினாள்.

அவளுக்குத் தன்மானம் இருந்ததால்தான், குற்றமற்ற தன் கணவனைக், கள்வனெனக் குற்றஞ் சாட்டிக் கொன்ற கொடுங்கோல் அரசை அழித்தாள்!

அத்தகைய பெண்ணரசியையா பழிப்பது? அதுவும், மணியம்மையின் காதலரா பழிப்பது? என்ன துணிச்சல்!' புலவர் பெரு

மக்களே! நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் பரம்பரைதானா நீங்கள்? 'ஆம்' என்றால், இளங்கோவைப் பழிப்பதைப் பார்த்தும் பொறுத்திருப்பதேன்? ஒரு வேளை, தமிழே வீரத்தை விட்டு விலகிவிட்டதோ? அறிவு பீடத்தை விட்டு அகன்று விட்டதோ? பதில் கூறுங்கள்.

திராவிடத்தார்களுக்கு ஒரு நிலையான கொள்கை கிடையாது என்று நாம் கூறினால், கோபம் பொத்துக் கொண்டு வருகிறது சில பு...ர்...ர...ட்...சி வீரர்களுக்கு! இதோ பாருங்கள், இலக்கியத் துறையில் இவர்களுக்குள்ள ஞானத்தை!

> "சிலப்பதிகாரம் பெண்ணைப் பெருமைப்படுத்திப் பேசும் பேரிலக்கியம்"

என்று பேசுகிறார் திராவிடக் கழகத்தின் இலக்கியப் பிரசாரகரான புலவர் இலக்குவனார்! அதை! 'சிலப்பதிகாரத்தின் சிறப்பு' என தலைப்பு கொடுத்து பிரசுரிக்கிறது 'விடுதலை'.

> சிலப்பதிகாரம் சிந்தித்து ஆராய்வதற்குரிய சிறந்த தமிழ் நூல்......தமிழர் நாகரீகத்தை விளக்கும் நூல்...ராமாயணத்தைப் போல் - பெரிய புராணத்தைப் போல் - ஜீவகசிந்தாமணியைப் போல் பூசை பண்ணும் மனப்பான்மை உண்டாக்கும் நூலல்ல. இதுதான் அந்த நூலுக்குரிய தனிச் சிறப்பு"

என்று 21—3—51 விடுதலையில் எழுதுகிறார், பெரியாரை நிழல் போல் பின்பற்றிச் செல்லும் சாமி சிதம்பரனார். இதை,

சிலப்பதிகாரம் சொல்லும் செய்திகள் யாவை?

பகுத்தறிவு, ஜனநாயகம், தன்மானமே தமிழர் பண்பு.

என்று கொட்டை எழுத்துக்களில் இரண்டு காலம் தலைப்பு கொடுத்து விடுதலையில் பிரசுரித்திருக்கிறார் அதன் ஆசிரியர். அந்தக் கட்டுரையில் சாமி சிதம்பரனார் மேலும் கூறுவதைப் படியுங்கள்:

> "கண்ணகி சிறந்த குணமுடையவள். அழகும் அரிய குணங்களும் அவளிடமிருந்தன".

என்கிறார் ஈ. வெ. ரா.வின் சீடர். குருவுக்கு, அறிவு - மனித உணர்ச்சி - தன்மானம் முதலிய நல்ல குணங்கள் அற்றவளாகக் காட்சியளிக்கிறாள் கண்ணகி. சீடருக்கோ, அத்தனை குணங்களும் உடையவளாக காட்சியளிக்கிறாள். ஒரே பாத்திரம்; இருவேறு காட்சிகள்; காண்பவர்கள் இருவரும் ஒரே கட்சியினர். அதுமட்டுமல்ல - குருவும் சீடரும். இதைக் கண்டு வெட்கப்படுவதுமட்டுமல்ல; இவர்களையும் பொது வாழ்வில் நடமாடவிட்டதற்காக வேதனையும் படவேண்டும். சிலப்பதிகாரத்தின் கருப் பொருளைப் பற்றிக் கூறும்போது, "ஆரிய நெறியைப் பரப்புவதற்

காகவே எழுதப்பட்டது" என்கிறார் ஈ. வெ. ரா. "ஆரம்பமுதல் இறுதிவரையில் ஒரே ஆரியந்தானே காட்சியளிக்கிறது" என்றும் ஆத்திரத்தோடு கேட்கிறார். அவருக்கு, நாம் பதிலளிக்கத் தேவையில்லை. அவரது சீடர் சிதம்பரனாரைக் கொண்டே பதிலளிக்கச் செய்கிறோம். விடுதலையில் தாம் எழுதிய கட்டுரையின் இறுதியில் சிலப்பதிகாரத்தின் சீரிய கருப் பொருள்களைக் கணக்கோடு கூறுகிறார் சிதம்பரனார் :

"சிலப்பதிகாரக் கதையிலே கூட்டல், கழித்தல், பெருக்கல் வகுத்தல்களைப் புகுத்திப் படித்தால், இந்த மூன்று உண்மைகளை மறுக்கமுடியாது. (1) தெய்வீகச் சடங்குகளால் பயனில்லை. (2) அறிவின்றி, விசாரணையில்லாமல் நிரபராதிகளுக்குத் தண்டனை அளிக்கும் அரசாங்கம் பொதுமக்களால் அழிக்கப்படும். (3) தமிழன் தன்னை அவமதிக்கும் எவனுக்கும் தலைவணங்கமாட்டான். தன்னை அவமதிப்போரை அடக்கி தன்மானத்தைக் காப்பாற்றியே தீர்வான். பிரித்தாளும் சூழ்ச்சிக்கு தமிழன் ஏமாற மாட்டான்.

இந்த உண்மைகளை விளக்கவே சிலப்பதிகாரம் எழுதப்பட்டது...... இதை மெய்ப்பிக்க நாம் எப்பொழுதும் தயார் ; எந்த இடத்திலும் வாதிக்கவும் முன்னிற்போம்".

சிலப்பதிகாரம், பயனுள்ள நூல் - படிக்க வேண்டிய நூல் - கழிக்கத்தக்கன சில இருப்பினும், பொதுவாகப் பாராட்ட வேண்டிய-நூல் என்று கூறுவது மட்டுமல்ல ; அவரது கூற்றை மறுப்போரை வாதுக்கும் அழைக்கிறார் சிதம்பரனார். ஈ. வெ. ரா. வுக்குத் தன்மானமிருப்பின், சாமி சிதம்பரனாரோடு சமருக்குச் செல்லட்டும். இல்லையேல், சிதம்பரனாரின் சிலப்பதிகாரப் பற்று உண்மையாயின், தமது மானத்தைக் காத்துக் கொள்வதற்கேனும் ஈ. வெ. ரா.வின் வட்டாரத்தை விட்டு அவர் வெளியேறட்டும். 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்பதுபோல, தமிழுக்குத் தொண்டு செய்வதாக நடிப்பது ; அதே சமயத்தில், தமிழின் பெருமையை இழித்துப் பேசும் ஈ. வெ. ரா.வுக்கும் துதி பாடுவது என்ற இழிநிலை இனியும் நீடிக்கக் கூடாது.

இப்படி, முன்னுக்குப்பின் முரணாக, ஒருவர்க்கு ஒருவர் எதிர் மாறாகப் பேசும் ஒரு கூட்டமும் தமிழ் நாட்டில் இருக்கிறதே !

இந்த லட்சணத்தில் சிலப்பதிகார யாகாடு கூட்டியவர்களின் தமிழ்ப் பற்றை நையாண்டி செய்கிறது 'திராவிட நாடு'. அது மட்டுமல்ல ; தாங்கள் என்றென்றும் சிலப்பதிகாரப் பக்தர்கள் போலவும், தேசிய வாதிகள் இப்போதுதான் சிலம்பின் சிறப்பைப் பற்றி சிந்திக்கத் தொடங்கி இருப்பதாகவும் கூறுகிறது.

தமிழ் மொழிக்கலைகளுக்கோ, காவியங்களுக்கோ திராவிடத்தார்கள் எந்தக் காலத்திலும் மதிப்பளித்ததில்லை. அதுமட்டுமல்ல ; அவற்றிற்கு மதிப்பளிக்கும் அறிஞர்களின் மானத்தைக் கெடுக்

கும் வகையில் ஊருக்கு ஊர் கூட்டம் போட்டு எசிப்பேசுவதும் அவர்களின் அன்றாட வேலை. ஆங்கிலேயன் இந்த நாட்டைவிட்டுப் போகமாட்டான் என்ற நம்பிக்கை இருந்தவரை, திராவிடத்தார்கள் ஆங்கில மாயைக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். சைமன் ராமசாமி, ஸ்டாலின் ஜெகதீசன், எட்வர்டு மாணிக்கம், மேயோ குப்பம்மாள், மிஸஸ் மிராண்டா என மேல்நாட்டாரின் ஆங்கிலப் பெயர்களை தங்கள் பெயர்களுக்கு முன்னே முடிசூட்டியது போன்று வைத்துக் கொள்வதில் ஆனந்தப்பட்டார்கள். ஆனால், தேசிய எழுச்சியாலும் பாரதியாரின் உழைப்பாலும் மக்களிடையே நாட்டுப் பற்றோடு மொழிப்பற்றும் வேகமாக வளர்ந்தது. அதோடு வெள்ளையாட்சி வெளியேறுவது திண்ணம் என்ற நிலையும் தோன்றியது. ஆகவே, தமிழை வாழ்த்தினாலொழிய தாம் வாழமுடியாது என்பதை உணர்ந்து கொண்டனர் திராவிடத்தார்கள். அதனால் சைமன், ஸ்டாலின், எட்வர்டு, மேயோ, மிராண்டா என்ற பெயர்களுக்கெல்லாம் தலைமுழுக்குப் போட்டுவிட்டு நாராயணசாமி நெடுஞ்செழியரானார்; ராமையா அன்பழகனானார்; நடராஜர் கூத்தரசரானார். ஆம், விலைபோகாத பண்டத்திற்கு வியாபாரி லேபிள் மாற்றுவது போல! புதிய பெயர்களில் பழைய பேயாட்டங்களைத் தொடர்ந்து நடத்தினர். உள்ளத்தில் உண்மைத் தமிழ்ப் பற்று இல்லாவிடினும், இவர்களது நடிப்பில் மயங்கி, 'இவர்களும் உண்மையான தமிழ்ப் பற்றுடையவர்கள்தான்' என்று நம்பினர் - நம்புகின்றனர் பண்டிதப் பெருமக்களில் பலர்.

ஆனால் என்னதான் திறமையாக வேஷம் போட்டாலும், சில சந்தர்ப்பங்களில் வேஷம் கலைந்து உண்மை வெளிப்பட்டுவிடுகிறது.

சிலப்பதிகாரம், நாம் திராவிடர் அல்லர் - தமிழர்; நமது தாயகத்தின் பெயர் திராவிடமன்று - தமிழகம்; அதன் வடக்கெல்லை விந்தியமன்று - வேங்கடம்; தமிழ் நாட்டு அந்தணர் ஆரியரல்லர் - தமிழர்; தமிழருடையப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் வேங்கடத்திற்கு வெளியே உள்ளவர்களின் பண்பாடுகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் வேறானதாயினும், விரோதமானதல்ல என்பவற்றைத் தெளிவாக வற்புறுத்துகின்றது. இந்த உண்மைகளுக்கு நேர்மாறான போக்கிலே 'காலட்சேபம்' நடத்திக்கொண்டிருக்கும் ஈ. வெ. ரா., சிலப்பதிகாரத்தை எதிர்ப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் ஒரு கோடி ஈ. வெ. ரா.க்கள் புறப்பட்டாலும், தமிழ் மக்களிடையே சிலப்பதிகாரத்திற்குள்ள செல்வாக்கைக் குறைக்க முடியாது.

• தேசீய வாதிகள், சிறப்பாக தமிழரசுக் கழகத் தோழர்கள் சிலம்பு காட்டும் செந்நெறியை தமிழகமெங்கும் பரப்பவேண்டும். அரசியல் மாநாடுகள் நடத்தும்போதெல்லாம், அதோடு சிலப்பதிகார மாநாடும் சேர்த்து நடத்தவேண்டும். இதை மறத்தல் கூடாது.

சென்னை சிலப்பதிகார மாநாடு வெற்றிபெற உழைத்தவர்களுக்கும், அதில் பங்கு கொண்டு பேசிய பேரறிஞர்களுக்கும் நாது மனமார்ந்த பாராட்டு.

பூம்புகார் மாநாடு

காவிரிப்பூம்பட்டினம் ஒரு காலத்தில், சோழ மன்னரின் தலை நகராகவும், சர்வதேசப் புகழ் வாய்ந்த துறைமுகப்பட்டினமாகவும் இருந்தது. அதற்குப் பூம்புகார் என்றும் மற்றொரு பெயருண்டு. கற்பரசி கண்ணகியும் கலையரசி மாதவியும், இவ்விருவரது காதலனான கோவலனும், பிறந்து-வளர்ந்து-வாழ்ந்ததும் காவிரிப் பூம்பட்டினமாகும். "காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கே" என்ற உண்மையை அறிந்தவுடன், குன்றனைய பொருளனைத்தையும் ஏழை எளியவர்களுக்குத் தானமீந்து, துறவடைந்த பட்டினத்தடிகள் பிறந்ததும் பூம்புகாரே என்று கூறும் புராணங்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த பூம்புகார் நகரின் பெரும் பகுதியைக்கடல் விழுங்கிவிட்டது. எஞ்சிய சிறு பகுதி இன்றும் இருந்து வருகிறது. சீர்காழிக்குத் தென் கிழக்கே 'காவிரிப் பட்டினம்' என அழைக்கப்படும் ஊர்தான் பழைய பூம்புகார் என்பதற்கு சான்றுகள் பல உள.

காவிரியாறு கடலொடு கலக்கும் இடந்தான் பூம்புகார் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆறும் கடலும் சந்திக்கும் அந்த அழகிய காட்சியை இன்றுங்கூட காவிரிப்பூம் பட்டினத்தில் காண முடிகிறது. மற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணும் செய்திகளை உறுதிப் படுத்தும் சான்றுகளும் அங்கு பல உள.

பூம்புகார், இன்று ஒரு சிறு கிராமமாக சீரும் சிறப்புமற்றுக் கிடக்கிறது. ஆயினும், அதன் பழம் பெருமைகளைப் பாராட்ட அன்பர்கள் பலர் முன்வந்துள்ளனர். அடுத்த ஜூன் மாதம் 1, 2, 3 தேதிகளில் காவிரிப்பூம் பட்டினத்தில் சிலப்பதிகார மாநாடு கூட்டி, தமிழறிஞர்கள் பலரைக் கொண்டு சிலப்பதிகார விருந்தளிக்கத் திட்டமிட்டுள்ளனர். திரு. கே. எஸ். இராமலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திருவாளர்கள் கே. பாலசுப்பிரமணியம், டி. எம். சீனிவாசன் ஆகியோரைச் செயலாளர்களாகவும், திரு. எம். எஸ். சொக்கலிங்கம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

அம்மாநாட்டிற்கு தமிழகத்தின் தலைசிறந்த பொருளாதாரப் புலவரும், அரசியல் தலைவரும், சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய செந்தமிழ் அறிஞருமான டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் தலைமைதாங்க இசைந்துள்ளது மாநாட்டின் வெற்றிக்கு சிறந்த அறிகுறியாகும். மாநாடு வெற்றிபெற தமிழ் மக்கள் உதவுவார்களாக!

உண்மை வெளிப்படுகிறது!

இந்தியாவை மொழிவழி நாடுகளாகப் பிரிக்கவேண்டும்; பிரிக்கப்பட்ட நாடுகள் தமது அரசியலைத் தாமே வகுத்துக்கொள்ளும் சுய நிர்ணய உரிமை பெற்றனவாயுமிருத்தல் வேண்டும். இவை, தமிழரசுக் கழகத்தாரின் தலையாய கொள்கைகள். மொழிவழிநாடுகள் கொண்ட இந்திய சமஷ்டியின் அவசியத்தை தமிழரசுக் கழகம் மறந்ததில்லை. அத்தகைய ஒரு சமஷ்டியைக் காணவும் அது விரும்புகிறது. ஆனால், சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரங்கள், மாகாணங்கள் மனமொப்பித் தந்தனவாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே கழகம் சமஷ்டி அமைப்பை வரவேற்கிறது. தமிழரசுக் கழகத்தின் சுயநிர்ணயக் கொள்கையைக் கண்டு தேசியவாதிகளில் சிலர் திகைத்ததுண்டு. பாகிஸ்தான், திராவிடஸ்தான் போன்று இதுவும் இந்தியாவைத் துண்டாடும் திட்டந்தான் என்று பழிசுமத்தியவர்களும் உண்டு. ஆனால், நாம் கோரிய சுயநிர்ணய உரிமை, காங்கிரஸ் பல ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானத்தின் மூலம் ஒப்புக்கொண்ட கொள்கையாகும். அந்தத் தீர்மானப்படித்தான் இன்று இந்தியாவின் ஒரு அங்கமாகிய காஷ்மீருக்கு சுயநிர்ணயம் வழங்கியிருக்கிறது நேரு அரசாங்கம். அயல் நாட்டு உறவு, உள்நாட்டுப் பாதுகாப்பு, போக்குவரத்து, சுங்கம் ஆகிய நான்கு அதிகாரங்களைத் தவிர இதர எல்லா அதிகாரங்களும் காஷ்மீருக்கே உண்டு. இந்திய யூனியனில் சேரும் யூனிட்டுகள் சம அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்பது காங்கிரசின் நெடுநாளைய கொள்கை. ஆனால், இன்று அமைக்கப்பட்டுள்ள இந்திய யூனியனின் யூனிட்டுகள் சம அந்தஸ்தில் இல்லை என்பதை எல்லோரும் அறிவர். கவர்னர் மாகாணங்களுக்கும் அரச பிரமுகர் மாகாணங்களுக்கும் அந்தஸ்தில் பல வேற்றுமைகள் உள. இந்த இருவகை மாகாணங்களைவிட, மிகவும் தாழ்ந்த அந்தஸ்தில் கமிஷனர் பிரதேசங்கள் இருந்து வருகின்றன. இந்த மூன்று வகைப்பட்ட மாகாணங்களுக் கெல்லாம் இல்லாத ஒரு அந்தஸ்தும் அதிகாரமும் இன்று காஷ்மீருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இஃதோர், விநோதமான சமஷ்டி! ஆயினும், மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படும் என்ற கொள்கை இன்னமும் உறுதி செய்யப்பட்டு வருவதால் நமக்கு ஒருவகையில் ஆறுதல் ஏற்படுகிறது.

இப்போதுள்ள ராஜப்பிரமுகர்களின் காலத்திற்குப் பிறகு அவர்கள் கீழ் உள்ள மாகாணங்களும், கவர்னர் மாகாணங்களின் அந்தஸ்துக்கு வந்துவிடும் என்று மத்திய அரசினர் அளித்துள்ள வாக்குறுதியும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்! கமிஷனர் மாகாணங்கள் அனைத்தும்கூட விரைவில் கவர்னர் மாகாணங்களைப் போன்று சட்டசபை, மந்திரி சபையுடன் கூடிய ஜனநாயக

அந்தஸ்தை அடைந்து விடும் என்ற நம்பிக்கையும் தோன்றியிருக்கிறது. இவையனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டால் இந்திய யூனியனின் அங்கங்கள், சம அந்தஸ்துள்ள அரசுகளைக் கொண்ட மொழிவழி நாடுகளாகி விடும் என்பது திண்ணம். ஆனால், அந்த சம அந்தஸ்து சுயநிர்ணயப்படியுள்ள சுதந்திர அந்தஸ்தாகவும் இருக்கவேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் விருப்பம். இந்த விருப்பமும் விரைவில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை தோன்றியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில், காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதம் எழுந்தபோது, ஜபருல்லாவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த பி. என். ராவ். பின்வருமாறு பேசியிருக்கிறார்:

> "இந்திய யூனியனில் உள்ள அங்கங்களின் (மாகாணங்களின்) அந்தஸ்து எத்தகையது என்பதைப் பற்றி அரசியல் மன்றத்தில் யோசனை எழுந்தது. அப்போது ஒவ்வொரு யூனிட்டுக்கும் சுய நிர்ணய உரிமையுண்டு என்ற கொள்கை அங்கீகரிக்கப்பட்டது. அதையொட்டியே காஷ்மீரில் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்படுகிறது. இனித்தான் மற்ற யூனிட்களுக்கும் அரசியல் நிர்ணய மன்றம் அமைக்கப்படும்".

உலக மன்றத்தில் பேசியிருக்கும் இந்த விஷயம் உண்மைக்கு மாறானதாக இருக்கமுடியாது. மேலும், பி. என். ராவின் கருத்து, டில்லியின் கருத்தாகத்தான் இருக்கமுடியும் என்பதிலும் ஐயமில்லை.

ஆகவே, தமிழ் நாட்டார் திராவிடஸ்தான் போன்ற அடையமுடியாத தத்துவங்களில் ஆர்வம் காட்டுவதைவிட, சுய நிர்ணய உரிமையுடைய சுதந்தரத் தமிழகத்தை அடைய ஒருமனதுடன் பாடுபடவேண்டும். அப்படி ஒரு கிளர்ச்சி முழுமூச்சுடன் நடத்தப்பட்டால், டில்லி அதற்கு எதிரிடையாக இருக்காது; ஏற்றுக் கொள்ளும் என்பதற்கு பி. என். ராவ் பேச்சு ஒரு சான்றாகும்.

கள்ளக்குறிச்சி தமிழரசுக் கழக மாநாடு

15—4—51-ல்

கள்ளக்குறிச்சி ஸ்ரீதரன் கொட்டகையில் நடைபெறும்.

தலைவர்: ந. சஞ்சீவி எம். ஏ. திறப்பாளர்: சின்ன அண்ணாமலை

தமிழ்க்கொடி உயர்த்துபவர்: கவிஞர் வானம்பாடி

தமிழ்நாடு படத்திறப்பு: தலைவர் ம. பொ. சிவஞானம்

கவிஞர். கா. மு. ஷெரீப், ஜனார்த்தனம், நாஞ்சில் சங்கரலிங்கம், வி. கே. குப்புசாமி, குடந்தை பாலு ஆகியவர்கள் கலந்துகொள்வார்கள்.

இங்ஙனம்:

வரவேற்புக் குழுவினர்

நாட்டு நடப்பு

முதலமைச்சர் கண் விழிக்கட்டும்!

'சென்னை நகரம் தமிழகத்தைச் சார்ந்ததே' என்று காங்கிரஸ் மேலிடத்தவரும், ஆந்திர அமைச்சர்கள் உட்பட்ட சென்னை அரசினரும் தீர்ப்பளித்து விட்டனர். ஆயினும், ஆந்திரர்களின் பேராசைக் குணம் இன்னும் அழியவில்லை. அரசாங்க இலாகாக்களில் பதவி பெற்றுள்ள ஒவ்வொரு ஆந்திரரும், சென்னையை ஆந்திரமயமாக்கத் திட்டமிட்டு வேலை செய்கின்றனர். சென்னை நகரசபை கமிஷனர், நகராண்மைக் கழகத்திற்கு அதிகாரிகளையும் சிப்பந்திகளையும் ஆந்திரர்களாகவே பார்த்து நியமித்துவருகிறார். அரசாங்கத்திலுள்ள ஆந்திர அமைச்சர்கள் சென்னை நகரம் சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஆந்திரருக்கு அனுகூலமாகவே செயல் புரிந்து வருகின்றனர். நகரில் வழங்கப்படும் ரேஷன் கார்டுகள், இதுவரை ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடிக்கப்பட்டிருந்தன. ஆனால், கொஞ்ச நாளாக ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் அச்சடிக்கப்பட்ட கார்டுகள் தமிழ் மக்களிடையே விநியோகிக்கப்படுகின்றன. நகர மக்களில் தெலுங்கர்களே அதிகம் என்று, பின்னால் சாதிப்பதற்காகவே இந்த முன்னேற்பாடு போலும்! இம்மாதிரி ஒன்றிரண்டு அல்ல; ஆயிரமாயிரம் சதித் திட்டங்கள் அன்றாடம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சென்னை முதலமைச்சர் தமிழ்நாட்டவர். அவர் கீழ் அமைச்சராயுள்ள ஆந்திரர்கள் தமிழருக்கு இழைத்துவரும் அநீதிகளை முதலமைச்சர் அறிந்திருக்க வேண்டும். பல விஷயங்களில் தமிழரசுக் கழகத்தார், அடிக்கடி, அவருக்குப் புகார் செய்துமிருக்கின்றனர். ஆயினும், முதலமைச்சர் ஆந்திர அமைச்சர்களைத் திருத்தத் தவறிவிட்டார். முதலமைச்சர் விரைவில் கண் விழித்து, ஆந்திரரின் கொட்டத்தை அடக்குவார் என்று நம்புகிறோம். இல்லையேல், அவர்களை அடக்கும் நடைமுறையை தமிழரசுக் கழகத்தார் மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

கொட்டம் அடங்கிற்று!

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு சென்னையில் வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது. தங்களுக்குப் பிடிக்காத கூட்டங்களை, மாநாடுகளைக் கலைப்பதிலே கைதேர்ந்தவர்கள் திராவிடத்தார்கள். அப்படியிருந்தும் 'திராவிட இயக்க எதிர்ப்பு' என்ற பெயரிலே கூட்டப்பட்ட இந்த மாநாடு மிக அமைதியாக நடந்து முடிந்திருக்கிறது. காரணம், கண்ணகி பந்தலில் வெள்ளம்போல் திரண்டிருந்த தமிழ் மக்களின் வீர உணர்ச்சியை கண்டு திராவிடத்தார்கள் அஞ்சியதேயாகும்.

சென்னை மாநாட்டினர் திராவிட இயக்கத்தை எதிர்ப்ப

தோடல்லாமல், தமிழ் மாகாணப் பிரிவினையின் அவசியத்தையும் வற்புறுத்தித் தீர்மானித்திருக்கின்றனர். திராவிட இயக்கம் தமிழ் மாகாணப் பிரிவினையைத் தடுக்கும் முட்டுக்கட்டையென்பதை மாநாட்டில் பேசிய ஒவ்வொருவரும் வற்புறுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கது. திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு எந்தக் கட்சியின் சார்பிலும் நடைபெறவில்லை. மாநாடு மட்டுமல்ல; எதிர்ப்பு இயக்கமும் அப்படித்தான். ஆகவே, அரசியலில் காங்கிரசுடன் கருத்து வேற்றுமை கொண்டவர்கள் கூட இந்த இயக்கத்தை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். எந்த ஒரு தனி மனிதர்கள் மீதும் விருப்பு வெறுப்பு கொண்டு எதிர்ப்பியக்கம் நடத்தப்படவில்லை. திராவிட இயக்கத்தினரின் அநாகரீகப் போக்கிலிருந்தும், அராஜகக் குழப்பத்திலிருந்தும் தமிழ்ப் பண்பாட்டையும் - தமிழகத்தையும் காப்பாற்றவே இந்த இயக்கம் நடைபெறுகிறது. திராவிட இயக்கத் தலைவர்களும், எதிர்ப்பியக்கத்தினர் மீது சீற்றங்கொள்ளாமல் சிந்தித்துத் திருந்துவார்களானல் அவர்களுக்கும் நன்மை; நாட்டிற்கும் நன்மை.

—: ● :—

வெளிவந்து விட்டது!

கண்ணகி வழிபாடு

(ஆராய்ச்சி)

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

சிலப்பதிகாரக் கண்ணகியை மக்கள் வழிபடவில்லையே என வருந்துகின்றனர் தமிழ் அறிஞர்கள். அவர்கள் வருத்தத்தைத் தீர்க்கும் வரலாற்று வழிப்பட்ட ஆராய்ச்சி, இந்நூல்.

ஆடி மாதந்தோறும் நடக்கும் மாரியம்மன் வழிபாடே கண்ணகி வழிபாடென்பதை சான்றுகளோடு நிரூபித்திருக்கிறார் ஆசிரியர்.

விலை அணா இரண்டு

ஒரு பிரதி மட்டும் வேண்டுவோர் 0 3 0 ஸ்டாம்பு அனுப்பவும். வியாபாரிகளுக்கு, கமிஷன் உண்டு.

விவரங்களுக்கு:

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

சிலம்பொலிக்கு எதிரொலி!

'வண்டு'

சென்னையில் கூடிய சிலப்பதிகார மாநாடு மிகச் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது. தலைமை வகித்த டாக்டர் மு. வ. கூறியது போன்று, தமிழ் மொழியின் வரலாற்றிலேயே சிலப்பதிகாரத்தின் பெயரால் மாநாடு கூடியது இது தான் முதல் முயற்சி. என்றாலும், முடிவானது அன்று. இனி மாவட்டங்கள் தோறும், சிற்றூர்கள் தோறும் சிலப்பதிகார மாநாடுகள் தொடர்ந்து நடைபெறும். ஏனெனில், சென்னையில் மாநாடு கூட்டியவர்கள் செந்தமிழின் பெயரால் சிந்து பாடி வயிறு வளர்ப்பவர்கள் அல்லர். செந்தமிழின் வாழ்விற்காகவும் வளர்ச்சிக்காகவும், தங்கள் வாழ்வையும் வளர்ச்சியையும் இழக்கத் துணிந்தவர்கள். ஆகவே, துவக்கிவைத்த இந்த நற்பணியை இனியும் தொடர்ந்து நடத்த அவர்களிடம் திட்டம் உண்டு. அதை நிறைவேற்றும் திறமை படைத்த தீரர்களும் உண்டு. ஆம்; இனி செந்தமிழ் நாட்டில் சிலம்பு தொடர்ந்து ஒலிக்கும் என்பது மட்டுமல்ல; ஒளியும் வீசும் என்று கூறலாம். அந்த ஒளியிலே, தமிழுக்காக - தமிழ் நாட்டுக்காக உண்மையாகப் பாடுபடுவோர் யார், தமிழின் பெயரால் வருமானத்தைப் பெருக்கி வயிறு வளர்ப்போர் யார் என்பதை மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.

சென்னையில் சிலப்பதிகார மாநாடு கூட்டியவர்கள் பெரும் பாலும் தேசிய வாதிகளாவர். ஆயினும், சிலப்பதிகார மாநாடு தேசிய விரோதிகளின் வட்டாரத்திலும் எதிரொலி செய்திருக்கிறது. இது எதிர்பார்த்தது தான்.

'சிலம்பு ஒலித்தது' என்ற தலைப்பில், சிலப்பதிகார மாநாடு பற்றி நையாண்டி செய்யும் கட்டுரையொன்றைப் பிரசுரித்திருக்கிறது 'திராவிட நாடு'. நேருக்கு நேர் வாதாடுவது வீரர்களின் வழக்கம். ஒளிந்தும், நெளிந்தும் குறும்புத் தனம் செய்வது கோமாளிகளின் வேலை. ஆனால், 'முன்னேற்றம்' என்ற முத்திரை தாங்கிய கட்சித் தலைவரின் ஏடு, வீரர்களுக்குரிய முறையில் வெளிப்படையாக வாதாடாமல், கோமாளிகளுக்குரிய குறும்புத்தனத்தில் இறங்கி இருக்கிறது.

"சென்னை மாநாட்டில் சிலம்பு ஒலித்தது; ஆனால் அதன் ஒளியை மறைத்துவிட்டார்கள்" என்று ஓலமிடுகிறது திராவிட நாடு. மாரிக் காலத்தில் இடியொலி கேட்கும் போது, அதனோடு சேர்ந்துவருகிற மின்னல் ஒளியையும் காணத்தான் செய்கிறோம். ஆனால், அந்த ஒளியைக் காண முடியாத குருடர்களுக்கு இடியோசை மட்டுந்தான் கேட்கும். மின்னலின் ஒளி தெரியாது. அது போன்று கண்ணிருந்தும் குருட்டுப் போக்கில் செல்லும் 'திராவிட நாடு'வின் கட்டுரையாளருக்கு கண்ணகி பந்தலில் வீசிய பேரொளியைக் காண முடியாதுதான்!

டாக்டர் மு. வ., அறிஞர் சேதுப் பிள்ளை ஆகியோரின் பேச்சுக்களிலே, இங்குமங்குமாக இரண்டொரு வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு, தம்முடைய குறும்புத் தனத்திற்கேற்ப ஆராய்ச்சி செய்கிறார் திராவிட நாட்டுக் கட்டுரையாளர்.

"ஏனைய காவியங்களைப்போலல்லாமல், சிலப்பதிகாரத்தில் கற்பனை

குறைந்த அளவில் இடம்பெற்றுள்ளது," என்றார் டாக்டர் மு. வ. இதை வைத்துக்கொண்டு கண்ணகி கொங்கையைப் பிய்த்தெறிந்த காட்சியைக் கற்பனை எனக்கூறுவதோடு நையாண்டியும் செய்கிறார் கட்டுரையாளர்.

பிறந்திடத்தைத் தேடுதே
பேதை மடநெஞ்சம்
கறந்திடத்தை நாடுதே
கண்

என, காம வெறி படைத்த உள்ளத்தைக் கடிந்து கொண்டார் பட்டினத்தார். எங்கும், எதிலும் பிறந்திடத்தையும், கறந்திடத்தையும் காணுவதிலேயே களிப்படைந்த கூட்டத்தார் பட்டினத்தார் காலத்திலே மட்டுமல்ல; இக்காலத்திலும் உண்டு என்பதை தம்மைக் கொண்டே மெய்ப்பிக்கிறார் கட்டுரையாளர். கண்ணகியின் ஆற்றலுக்கு அத்தாட்சியாக எத்தனை எத்தனையோ செய்திகள் உண்டு சிலப்பதிகாரத்தில். அதையெல்லாம் விட்டுவிட்டு கறந்திடத்தையே நாடுகிறது கட்டுரையாளரின் கண். அவரை நொந்துப் பயனில்லை. இத்தகைய சிறுமதியினரையும் அவர்களைப் பாராட்டும் கூட்டத்தினரையும் வாழவைத்துக்கொண்டிருக்கும் தமிழகத்தைத்தான் நோக வேண்டும்.

'அரசியல் பிழைத்தோரை அறக் கடவுள் கூற்றுவன் வடிவில் வந்து கொல்லும்' என்ற சிலப்பதிகார வரிகளை எடுத்துக்காட்டி, இன்றைய அரசினரை எச்சரித்தார் அறிஞர் சேதுப்பிள்ளை. இதை வைத்துக்கொண்டு கூத்தடிக்கிறார், கூற்றுவனிடம் நம்பிக்கையில்லாத கட்டுரையாளர். இந்த சான்றை சேதுப்பிள்ளை மட்டுமல்ல; இன்றைய தேசிய ஆட்சியை ஆதரிக்கும் ம. பொ. சி. அவர்களே ஆயிரமாயிரம் மேடைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசினர் மீது பழிகூற அல்ல; அவர்களைப் பண்படுத்த! அரசு நெறி பிறழ்ந்த ஆங்கிலக் கொடுங்கோலைக் கூற்றுவன் வடிவில் வந்து கொன்றார்கள் தேசிய வாதிகள். ஆனால், அந்தக் கொடுங்கோலருக்குக் குற்றேவல் புரிந்து வயிறு வளர்த்தார்கள் திராவிடத்தார்கள். ஆகவே, சிலப்பதிகாரத்தில் வரும் அந்தப் பகுதியை இன்றைய அரசினருக்கு எதிராக எடுத்துக் காட்ட திராவிடத்தார்களுக்கு உரிமை கிடையாது.

சிலப்பதிகார மாநாடு கூட்டிய தேசிய வாதிகளின் தமிழ்ப் பற்றை நையாண்டி செய்கிறார் கட்டுரையாளர். "மொத்தத்தில் சிலம்பு ஒலித்தது; அதுவரை லாபந்தான். சிலம்பையாவது ஒலிக்க நினைத்தார்களே!" என்கிறார் சிலப்பதிகாரத்தில் கறந்திடத்தை மட்டுமே நாடுபவர்.

ஏதோ, இத்தனை நாளும் தாங்கள்தான் சிலம்பை ஒலித்துக்கொண்டிருந்தது போலவும், இப்போதுதான் தேசிய வாதிகள் சிலம்பைப் பற்றி சிந்தித்திருப்பது போலவும், நாட்டு மக்களை நம்பவைக்கப் பார்க்கிறார் 'குமரிக் கோட்ட' ரசிகர். பன்னிரண்டு பக்கமுள்ள திராவிட நாட்டில், சிலப்பதிகார மாநாட்டைப் பற்றி ஏழு பக்கத்திற்குக் கட்டுரை எழுதியிருக்கிறார் காமரசப் புலவரின் திருத்தொண்டர். அந்த ஏழு பக்கத்தில் கண்ணகியின் கற்பைப் பற்றிப் பாராட்டும் வகையில் ஒரு வரிகூட - ஒரு வார்த்தைகூட இல்லை. இதுதான் இவர்கள் சிலப்பதிகாரத்திற்கு சிறப்பு செய்யும் வகை போலும்! சிலம்பின் சிறப்பை, கட்சிக் காழ்ப்பின்றி - சாதிப் பகையின்றி - காம வெறியின்றி - சித்தரித்துக் காட்டினார்கள் மாநாட்டின் பேச்சாளர்கள். அப்படிப்பட்டவர்களைப் போலிகளென்று கூறுகிறார், போலித்தனமன்றி வேறொன்றறி

யாதவர் உண்மையிலேயே திராவிடத்தார்கள் சிலப்பதிகாரத்திற்கு சிறப்பு தேட விரும்பியிருந்தால், அதை எத்தனையோ வகையில் செய்திருக்க முடியும். எம். ஏ. பட்டம் பெற்ற 'திராவிட நாடு' ஆசிரியர், கண்ணகியின் சிறப்பை ஆங்கிலத்தில் எழுதி அகில உலகத்திலும் பரப்பி இருக்கலாம். செய்ததுண்டா? கிடையாதே. ரோமாபுரி ராணிகளின் அங்கங்களின் அழகை-அந்தரங்க லீலையை காமத்தேன் நனி சொட்டச் சொட்ட எழுதுவதற்கு நேரமிருந்தது. அதை அச்சிட்டு, மாணவர்களிடையே விற்றுப் பணமாக்கிக் கொள்ள மனமிருந்தது. ஆனால், சிலம்பால் புரட்சி விளைவித்த வீரக் கண்ணகியின் செய்தியை ஆங்கிலத்தில் எழுத ஆற்றலிருந்தும், அறிவில்லை.

வலது கொங்கையைத் திறந்த கோலத்தோடு, ஒரு மங்கையை டகப்புப் படம் போட்டு - புத்தகம் தயாரிப்பது - அதை மாணவர்களிடையே விற்றுப் பணம் சம்பாதிப்பது அறிவுத் தொண்டாம்! கொடுங்கோலன் மீது கொண்ட கோபத்தால் ஒரு கற்பரசி, இடது கொங்கையைப் பிய்த்தெறிந்தாள் என்று கூறுவது அறியாமையாம். தாயினத்தின் பெருமையை - தமிழகத்தின் சிறப்பை - நையாண்டி செய்வதையே தொழிலாகக் கொண்ட இந்தக் கூட்டத்திற்கும் தமிழகத்தில் வாழ மனை இருக்கிறது; வயிறு வளர்க்க வசதியுமிருக்கிறது. தமிழகமே, நீ சீர்படும் நாள் எந்நாளோ?

அறிஞர் சேதுப்பிள்ளை, "ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற தமிழகம் வேறு எவருக்கும் அடிமைப்படக்கூடாது" என்று தமது திறப்புரையில் கூறினார். நாவரட்சி கொண்டவன் கானலை நீர் என்று எண்ணிக் களிப்படைந்தது போல, சேதுப்பிள்ளையின் கருத்தைத் திரித்துக் கூறி களிப்படைகிறார், உண்மைக்கும் பொய்க்கும் வேற்றுமை காணாத கட்டுரையாளர். சேதுப்பிள்ளை, 'தமிழகம் வட நாட்டாரோடு தொடர்பு கொள்ளக்கூடாது' என்ற பொருளில் அப்படிக் கூறவில்லை. "தமிழகம் தனி ராஜ்யஉறுப்பாக விளங்க வேண்டும்" என்று ஐயத்திற்கிடமின்றி அறிவித்தார். இது தினசரிப் பத்திரிகைகளிலேயே வெளிவந்த செய்தி. குடியரசுச் சட்டப்படி, தனி ராஜ்ய உறுப்பு என்பது இந்திய யூனியனில் இணைந்துள்ள மாகாணங்களுக்குப் பெயர். ஆங்கிலத்திலுள்ள குடியரசுச் சட்டத்தை தமிழில் பெயர்க்கும்பணியை ஏற்றுள்ளவர் சேதுப்பிள்ளை. ஆகவே, தாம் கோரும் தமிழகத்தின் அரசியல் அந்தஸ்து எத்தகையது என்பதை சந்தேகத்திற்கிடமற்ற வகையில் - சட்ட ரீதியான வார்த்தையில் கூறிவிட்டார். ஆனால், சத்தியத்திலும் நம்பிக்கையின்றி-சட்டத்திலும் ஞானமின்றி வயிறு வளர்ப்பதையே வாழ்க்கைத் தொண்டாகக் கொண்டுவிட்ட கட்டுரையாளருக்கு இது புரியாததில் வியப்பில்லை. தமிழகம் வேறு எவருக்கும் அடிமைப் பட்டிருக்கக் கூடாது என்று அவர் கூறியதற்கு, 'திராவிட' மாயையில் சிக்கி ஆந்திர - கேரள - கன்னடர்களுக்கு தமிழகம் அடிமைப்பட்டிருக்கக் கூடாது என்பதே பொருள். கட்டுரையாளர் உணர்வாரா!

"இருபது ஆண்டுகளாக நாம் ஆற்றும் பகுத்தறிவுப் பணியின் பரிசு, குறளும் சிலம்பும் கொண்டாடப்படும் முயற்சி."

என்கிறார் கட்டுரையாளர். இரவலுக்குப் பிள்ளை வாங்கி அதைத் தம்பிள்ளையெனக் காட்டி பிச்சையெடுக்கும் சங்கைகெட்ட மங்கையர் சிலரைப் பார்த்திருக்கிறோம். இந்தப் போலித் தாயர் போன்று தமிழுக்கு - தமிழக வளர்ச்சிக்கு - தமிழினத்தின் வாழ்வுக்கு எங்கு,

யார் பாடுபட்டாலும் அதெல்லாம் தங்கள் கிளர்ச்சியின் எதிரொலி தான் என்றுப் பிரச்சாரம் செய்வது நன்றி, நாணயம் என்ற பண்பு கொஞ்சங்கூட இல்லாத திராவிடத்தாரின் தொழில். சிலப்பதிகாரம் பரவியதற்கு தங்கள் உழைப்பே காரணம் என்று கூறும் கட்டுரையாளர் எங்கே-எப்போது-எப்படி உழைத்தார்கள் என்பதை விளக்கவில்லை. பார்ப்பனரான உ. வே. சாமிநாதய்யர், செல்லரித்துக்கிடந்த சிலப்பதிகார ஏடுகளைச் சீராக்கி அச்சடித்துக் கொடுத்ததும், சிலப்பதிகாரத்தை பண்டிதரேயன்றி பாமரரும் படிக்கும் வகையில் புலவர் வேங்கடசாமி நாட்டார் உரை எழுதியதும் திராவிடத்தார்கள் முயற்சியின் எதிரொலிதானோ? இப்படியும் படு பொய் பேசி தமிழ் மக்களை ஏய்த்துப் பிழைப்பதைவிட, வேறொரு நல்லதொழிலை நாடுவது நலம்.

சிலப்பதிகார மாநாட்டன்று இரவு "ஔவையார்" நாடகம் நடைபெற்றதல்லவா? அது பிடிக்கவில்லை 'பகுத்தறி'வாளருக்கு! மாநாட்டைக் கூட்டியதன் கருத்து கண்ணகியைப் போற்றுவதன் மூலம், அவ்வீராங்கனையைப்பெற்றெடுத்த பெண்ணினத்தைப் பாராட்டுவதாகும். இதை டாக்டர் மு. வ.,

"இது சிலப்பதிகார ஆராய்ச்சி மாநாடன்று. காவியத் தலைவியைப் பாராட்டும் மாநாடு"

எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதனாற்றான், தமிழகத்தின் வீரப் பெண்ணைப் பாராட்டும் திருநாளில், தமிழ்ப் பெண்ணினத்தின் அறிவுக் களஞ்சியமான 'ஔவையார்' நாடகம் நடத்தப்பட்டது. ஆனால், பெண்களின் அறிவைப் போற்றுவதைவிட, அவர்களிடம் இன்பம் அனுபவிப்பதிலேயே நாட்டமுள்ள கட்டுரையாளரால் இதை அறிந்துகொள்ள முடியாதுதான்.

போகட்டும்; கட்டுரையாளரின் பொய் வாதங்கள் சிலப்பதிகார மாநாட்டின் சிறப்பைக் குறைத்து விட முடியாது. பாவம்! தமிழறிஞர்களை என்றென்றும் தேசிய முகாமுக்கு எதிர் முகாமிலேயே நிறுத்திவிடலாமென்று நம்பினார்கள். அந்த நம்பிக்கையை நாசமாக்கிக் காட்டிவிட்டது சிலப்பதிகார மாநாடு தேசியத்தோடு தமிழ் இரண்டறக் கலந்துவிட்டது. இனி, அது தேசிய விரோதிகளின் முகாமுக்குப் பயன்படாது. ஒருவேளை, அந்த முகாமை முறியடிப்பதற்குப் பயன்படலாம். ஆனால், சிலப்பதிகார மாநாட்டைக் கூட்டியவர்களின் சிந்தனை அதுவன்று.

வித்தகம் பேசவேண்டாம்
பணிசெய்தல் வேண்டும்.



24—3—51-ல் சென்னை ராயப்பேட்டை கண்ணகி பந்தலில் கூடிய சிலப்பதிகார மாநாட்டில் திரு. ந. சஞ்சீவி எம். ஏ., தமிழ்க் கொடியை உயர்த்தி வைத்துவிட்டுப் பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். மேடைமீது திருவாளர்கள் 'ஒளவை' புகழ் டி. கே. சண்முகம், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ஜீவபந்து ஸ்ரீபால், கவிஞர் வானம்பாடி, கவிஞர் கா. மு. ஷெரீப், எம். பி. சுப்பிரமணியம், ஏ. ரங்கநாத முதலியார், கே. காமராச நாடார், ம. பொ. சி., ரா. பி. சேதுப் பிள்ளை ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

கண்ணகி பந்தலில்

[**24—3—51**-ல் சென்னை ராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் கண்ணகிபந்தலில் கூடிய, சிலப்பதிகார மாநாட்டில் அறிஞர்கள் டாக்டர் மு. வ., ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ந. சஞ்சீவி எம். ஏ., ம. பொ. சி. ஆகியோர் சொற்பொழிவுகளின் சுருக்கமும், படங்களும் இந்த மலரில் தரப்பட்டிருக்கின்றன]

●

திரு. ரா. பி. சேதுப் பிள்ளை மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு :

தமிழகத்தின் தலைநகரான சென்னையின் வரலாற்றில், பல மாநாடுகள் 'நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இலக்கிய மணம் வீசும் இம்மாநாடுபோல் இன்னொன்று நடந்ததில்லை எனக் கூறுவது மிகையன்று.

சிலப்பதிகாரம் என்றதும் நமது நினைவு சேர, சோழ, பாண்டியர் ஆண்ட காலத்திற்குச் செல்கிறது. குமரி முதல் வட இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட, சேரலாதன் காலத்தைப் பற்றி சிந்திக்கிறோம். அக்காலத் தமிழ் மன்னர் வேறு நாட்டு வேந்தர் எவருக்கும் தலைகுனிந்து வாழ்ந்தவரல்லர்.

தமிழ் மன்னர்கள் - தமிழ் மக்கள் ஆகியோரின் வீரத்தையும் ஆற்றலையும் அரும் பெருங் குணங்களையும் நாம் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். நமக்குப் பண்டைத் தமிழகத்தின் நினைவு எழும்போதெல்லாம், அதன் சிறப்பு, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றை எண்ணி யெண்ணி இறும்பூதெய்துகிறோம். குன்றாத செல்வமும், குறையாத அறிவும், மங்காத புகழும் படைத்திருந்தது பண்டைத் தமிழ்நாடு. அந்தச் சிறப்பான நிலையை எதிர்காலத் தமிழகம் எய்தவேண்டும்.

சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது மூன்று விஷயங்களை தமிழ் மக்கள் தங்கள் மனதில் பசுமரத்தாணியெனப் பதியவைத்துக் கொள்ளவேண்டும். அவை அரசியல், சமூகம், சமயம் என்பனவாம். இதைத் தான் இளங்கோவடிகள்,

அரைசியல் பிழைத்தோர்க்கு
அறங் கூற்றுவதும்
உரைசால் பத்தினிக்கு
உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும்...

என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆளுவோர் அரசு நெறி பிறழ்ந்தால், அறமே கூற்றுவன் வடிவில் வந்து அரசையழிக்கும் என்பது சிலப்பதிகாரம் போதிக்கும் பாடம். அரசாளுவோர் இதை மறத்தல் கூடாது. இதையே,

அல்லல்பட்டு ஆற்றாது அழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

சிலப்பதிகார மாநாடு

என்றார் திருவள்ளுவர். குடிமக்கள் அல்லல்பட்டு அழுதால் அவர்கள் சிந்தும் கண்ணீர்த் துளிகளே அரசையழிக்க வல்லமை படைத்த ஆயுதங்களாகும். இந்தக் குறளுக்கு இலக்கியமென திகழ்கிறது சிலம்பு.

பத்தினியை வழிபடும் பண்பாட்டில் உலகத்திற்கே வழிகாட்டியது தமிழகம். கற்பின் சிறப்பை உணர்ந்தவர் தமிழர். ஆகவே கற்பரசிகளை தெய்வமாகப் போற்றி வழிபட்டது தமிழகம். இலங்கையில் கண்ணகி வழிபாடு இன்றும் நடக்கிறது. ஆனால் கண்ணகி பிறந்த காவிரிப்பூம்பட்டினத்திலோ, மதுரைமா நகரிலோ, வஞ்சி நகரிலோ கண்ணகி வழிபாடு காண முடியவில்லை.

கண்ணகி தெய்வத்தின் உருவம் தமிழ் நாட்டில் இல்லை. இங்கிலாந்து பொருட்காட்சி சாலையில் கண்ணகி உருவச்சிலை இருக்கிறது. கடந்த மகா யுத்தத்தில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதில் பலர் வியப்படைந்தனர். ஆனால் எனக்கு வியப்பில்லை. கண்ணகி தெய்வமே அந் நாட்டைக் காப்பாற்றினாள்.

நம் நாட்டை, ஆங்கிலேயராண்ட காலத்தில் பல பொருள்களை இங்கிருந்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு போயினர். கண்ணகியும் அப்போதே சென்றனள். இப்போது கண்ணகியின் சிலை இங்கிலாந்திலிருந்து மீட்கப்பட்டு இலங்கை கண்காட்சி சாலையில் இருக்கிறது.

தமிழரசுக் கிளர்ச்சி வலுப்பெற வேண்டும்

தமிழகம் தனியரசு உறுப்பாக இயங்க நாம் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஆந்திரர் பிரிந்துபோய் விடுவார்கள்; பின்னர் தமிழ் நாடு தனி நாடாகும் என்றிருந்தோம். அப்படி ஏற்படாதென இப்போது தோன்றுகிறது.

தமிழ் மாகாணப் பிரிவினைக்கு உதவியாக நல்ல சான்றுகளைத் தருகிறது சிலப்பதிகாரம். தமிழக நில அமைப்பை வரையறுத்துக் கூறுகிறது சிலப்பதிகாரம். குமரிமுதல் வேங்கடம் வரை தமிழ்நாட்டு எல்லைஎனக்கூறுகிறது சிலப்பதிகாரம். தொல்காப்பியத்திலும்இதைக்காணலாம்.

கண்ணகிக்கு மங்கலா தேவி என்று ஒரு பெயர் உண்டு. மங்களூர் என ஒரு ஊர் இருக்கிறதல்லவா? நமது மங்கலா தேவியின் பெயரே மங்களூர் என மாறியதாக நடுநிலை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மாரித் தெய்வமான கண்ணகி செல்லுமிடத்தில் மழை பெய்யும். அம் மங்கல மடந்தை மங்களூர் சென்றிருந்தாள். அத

ளூலேயே அவ்வூர் மங்களூர் ஆயிற்று. இது உண்மை. தமிழனுக்குப் பொய் பேசத் தெரியாது. உண்மையையே சரியாகக் கூறமாட்டான்! குறைத்தே கூறுவான். நாம் தமிழராதலால் உண்மையையே பேச வேண்டும். மங்களூரும் எங்களூரே; நெல்லூரும் நல்லூர்தான் — எங்களூர்தான் எனக் கூறவேண்டும். அந்த ஊர்களை அடைவதற்காக கிளர்ச்சி நடத்தவேண்டும்.

தமிழர் போற்றிப் படிக்க வேண்டிய சிறந்த நூல் சிலப்பதிகாரம். தமிழ் நாட்டில் நிகழ்ந்த கதை. தமிழர் ஒருவரால் தமிழ்மொழியில் எழுதப் பட்ட கதை. ஆகவே, சிலப்பதிகாரம் தமிழரின் சொந்தச் செல்வம். அதைப் போற்றி வாழ்வோமாக!

உரிமைக்கு தமிழ்கொடி உறவுக்கு தேசீயக்கொடி

ந. சஞ்சீவி எம். ஏ.

மூவேந்தர் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தமிழ்க் கொடியை உயர்த்திவைத்து திரு. ந. சஞ்சீவி எம். ஏ., (காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர்) பேசியதாவது :—

சிலப்பதிகாரத்திற்கென மாநாடு கூடுவது தமிழ் மொழியின் வரலாற்றிலேயே இது தான் முதல்தடவை. தமிழ் மணமும், தேசீய மணமும் கலந்து கமழும் கண்ணகி பந்தலில், தமிழ் கொடியேற்றும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்க்கொடியில் காணும் மீனும், புலியும், வில்லும் தமிழ் மூவேந்தரின் சின்னங்களாகும். அழிந்து போன மூன்று பேரரசுகளின் சின்னங்கள் மட்டுமல்ல; இனி நாம் அமைக்க விரும்பும் தமிழரசுக்கு ஆர்வமூட்டும் சின்னங்களுமாகும். அன்று அரச பரம்பரை மூன்றாக இருந்ததன் விளைவாக அவர்கள் ஆண்ட தமிழ் நிலமும் மூன்று நாடுகளாக சிதைந்து கிடந்தன. அந்த சிதைந்த நாடுகளின் சின்னங்கள்தான் இவை. ஆனால் இன்றோ, கோவேந்தர்கள் மறைந்தனர்; ஆயினும் அவர்களால் ஆளப்பட்ட குடிமக்கள் மறையவில்லை. அந்த மக்கள் பேசி மகிழ்ந்த தமிழும் மறையவில்லை. அவர்கள் ஓடியாடி வாழ்ந்த உரிமைத் தமிழ் நாடும் மறையவில்லை. அப்படி மறையாத தமிழகத்தின் மாயாத தமிழ் மொழியின் பெருமையைப் பேசுகிறது இத் தமிழ்க்கொடி. அது மட்டுமா? தமிழ் இனத்தின் உரிமையைப் பெறப் போராடவும் உணர் ஆட்டுகிறது இக் கொடி. தனித்தனி கொடிகளில் கிடந்த மூவேந்தர் சின்னங்களை இன்று ஒரே கொடியில் பொறித்து ஏற்றி மகிழ்கின்றோம். சுதந்திர இந்தியாவில் சுதந்திரக் காற்றில் ஆடிப் பறக்கிறது நம் தமிழ் அன்னையின் மணிக் கொடி.

அறவாழி பொறித்த தேசீயக் கொடி- இந்திய தேசீய இனங்களிடையே உறவை வளர்க்க உணர்வூட்டுவதாகும். ஆம்; உறவுக்கு எல்லை இமயம்; உரிமைக்கு எல்லை வேங்கடம் என்பது போலவே, உறவுக்கு தேசீ

யக்கொடி, உரிமைக்கு தமிழ்க் கொடி. தமிழ்க் கொடியின் உரிமையும் பெருமையும், மேன் மேலும் பெருகப்போகிறதென் பதற்கு அறிகுறியாக, வளர்ந்து வரும் - இனியும் வளரவிருக் கும் வாலிபனாகிய என்னைக் கொண்டு இக் கொடியை ஏற்றி வைத்திருக்கிறீர்கள் போலும்!

வாழ்க தமிழ்க் கொடி!

வெல்க தமிழினம்!

நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியம்

வி. எஸ். டி.

சிலப்பதிகார மாநாட்டில் திரு. வி. எஸ். தியாகராச முதலியார் நிகழ்த்திய வரவேற்புரை :—

தமிழ் நாடெங்கும் தமிழ் முழக்கம் செழித்து வருகின்றது. சிந்தைக்கினிய, செவிக்கினிய செந்தமிழைத் தமிழ் நாட்டார் சீராட்டத் தொடங்கி விட்டனர். பண்டைத் தமிழ் நூல்களைப் படிக்கவேண்டும்; அவற்றை பாதுகாக்கவேண்டும்; அவற்றில் பொதிந்து கிடக்கின்ற பல அரிய பெரிய உண்மைகளை பொதுமக்கள் உணரச் செய்யவேண்டும் என்ற உணர்ச்சிகள் எங்கும் மிகுதியாக வளரக் காண்கின்றோம். இத்தகைய உணர்ச்சிகளின் வடிவம்தான் இம்மாநாடு. தமிழ் நாட்டார் போற்றும் ஐம்பெருங் காப்பியங்களுள் தலைசிறந்தது சிலப்பதிகாரம். பண்டைப் புலவர் பெருமக்கள் தமிழன்னைக்கு அணிகள் பல அணிவித்து கொலுவிருக்கச் செய்தனர். சிந்தாமணி, தமிழ் அன்னையின் முடிமணியாய் அமைந்தது; குண்டலகேசி, காதணியாய் அழகு செய்தது; வளையாபதி வளையலாய் அலங்கரித்தது; மணிமேகலை, இடை மேகலையாக ஒலித்தது; சிலப்பதிகாரம் காலில் சிலம்பாய் கலின் செய்தது; இத்தகைய சிறப்புப் பெற்ற சிலப்பதிகாரத்தை கவி பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று கூறினார். இந்நூல் தமிழ் காப்பியங்களில் உரை நடையிலும் செய்யுள் நடையிலும் தலைசிறந்து விளங்குகிறது. பழந் தமிழ் நாட்டின் சீர்மைக்கும் செம்மைக்கும் வளத்திற்கும் அறவொழுக்கத்திற்கும் சான்றாக நிற்கிறது. சோழ நாட்டின் செழுமையும், பாண்டிய அரசின் சிறப்பும், சேர நாட்டரசனின் வீரமும் இக்காவியத்தில் நன்கு விளக்கப்படுகிறது.

சிலப்பதிகாரக் கதை தமிழுலகத்திலேயே பிறந்து, தமிழகத்திலேயே வளர்ந்து, தமிழர் ஒருவரால் சொல்லப்பட்டு, தமிழர் ஒருவராலேயே முதன் முதல் தமிழிலேயே எழுதப் பெற்றது. இயல், இசை, நாடகம் என்ற மூன்று விதத் தமிழ்களும் நமக்கு இருந்தன என்று நாம் சொல்லிக்கொள்ள உரிமை கொடுத்த ஓர் முத்தமிழ்க் காப்பியமாக நமக்கு கிடைத்தது சிலப்பதிகாரம். இவ்வொரு நூலைப் பற்றி எழுந்துள்ள சொல் ஆராய்ச்சிகள், சரித ஆராய்ச்சிகள், கலை ஆராய்ச்சிகள், கால ஆராய்ச்சிகள், இலக்கிய ஆராய்ச்சிகள் போன்றவை வேறு எந்த நூலுக்கும் இல்லை

என்றால் அது மிகையாகாது. சமூக நிலை; அரசியல், பொருளாதாரம், கடவுள் வழிபாடு, வீரம், குடும்ப வாழ்க்கை, வாணிபம் இன்னும் பல துறைகளிலும் புதை பொருள்கள் நிரம்பிய காவியம் இது. கலைக் களஞ்சியம் என்று சிலப்பதிகாரத்தைத் தவிர மற்ற நூல்களைக் கூற இயலாது.

சிலப்பதிகாரத்திலே காணப்படுகின்ற பண்புகளை மக்கள் மனதில் ஊன்றச் செய்ய வேண்டும். பாமர மக்களுக்கு அதன் கதைப்போக்கையும், இலக்கியச் சுவையையும், கலைத் திறனையும் புலப்படச் செய்ய வேண்டும். ஒவ்வொரு தமிழனும் சிலப்பதிகாரச் செல்வத்தை, மனதில் பதியவைத்து தன் வாழ்க்கையில் பயன்படுத்தும் நாளையே இம்மாநாடு எதிர் நோக்குகின்றது.

எளிய கிராமவாசிக்கு "கண்ணகியின்" கதை தெரியும். அவள் காளியாக மாறியதையும், பாண்டிய மன்னனின் குடலைக் கிழித்து அவனைக் கொன்றதை

பாமரத் தமிழனும் படித்துணர வேண்டும்

யும், அவன் கூத்திலும், நாடகத்திலும், சினிமாவிலும் காண்கின்றான். ஆனல், நாடகத்தில் காண்பவைக்கும் காப்பியத்தில் படிப்பவைக்கும் உள்ள வேற்றுமைகளை அவன் உணரவில்லை. காப்பியத்தில் உள்ள கண்ணகியின் உயர்வை கிராமத் தமிழனும் அறியச் செய்ய வேண்டும். நாடகத்திலோ, சினிமாவிலோ பண்டைக் கால தமிழகத்தின் பண்பாடுகள் உண்மையாக எடுத்துக் காட்டப் பெறவில்லை. அவற்றை மக்கள் மனதில் பதியுமாறு எடுத்துக் காட்டவேண்டும். சிலப்புச் செல்வத்தை நம் நாட்டு மக்கள் அனைவரும் உணரச் செய்ய அவர்களின் உள்ளுணர்வை ஊக்க முயல்வதே இம்மாநாட்டின் குறிக்கோள்.

ஆசிரியர் இளங்கோவடிகள், ஓர் சிறந்த கலைஞர். கலையில் அவருக்குள்ள பற்றையும் ஆர்வத்தையும் விட அறநெறியில் உள்ள ஆர்வமும் பற்றும் அதிகமாகக் காணப்படுகின்றது.

அரைசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு
உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து
ஊட்டு மென்பதும்

ஆகியவை, அவர் நூலில் வற்புறுத்திக் கூறும் மூன்று சிறந்த உண்மைகள். அரசியல் தலைவர்களையும் தண்டிக்க வல்லது அறம்; கற்பமைந்த மாதரை மக்களும் தேவரும் போற்றுவர்; ஊழ்வினைப் பயனை எவராலும் மாற்ற இயலாது என்ற மூன்று உண்மைகளையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

கதையின் போக்கில் கவனிக்கும்பொழுது, கண்ணகி கற்புடையவள். கோவலன் கற்பு நெறி தவறியவன். மாதவி, தன் பிறப்பால் கற்புக்குரியவள் என்று கருதப்படாவிட்டாலும்

கண்ணகியைப் போலவே கற்பொழுக்கம் உள்ளவள். கண்ணகிக்குத் தன் கடமையே பெரிதாகத் தோன்றியது. தனது வாழ்க்கையில் பெரியதொரு கலக்கம் நேர்ந்த பொழுதும் அவள் தன் நெறி தவறாமல் இருந்தாள். தேவந்தி என்ற தோழி, கண்ணகியின் துயர்தீர காமன் கோவிலுக்குச் சென்று வழிபடுவோம் வா என அழைத்தபோது கண்ணகி, "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்" என்ற தமிழ் மறைக் கொள்கையுடையேனுக்கு "இது பீடு அன்று" என்று சொன்னாள். இதைப் பார்க்கும்பொழுது அவளது துணிவும் கடமையுணர்ச்சியும் கற்பின் திறமும் நம் மனதைக் கவருகின்றன.

காதலனுக்கு நீதியுரைத்த கற்பரசி

மதுரைக்குச் செல்லும்போது அந்நகருக்கு வெளியில் உள்ள ஆயர் சேரியில், கோவலனும் கண்ணகியும் தங்குகின்றார்கள். தன் கையாலேயே சமைத்து கணவனுக்கு உணவளிக்கும் பொழுது, கோவலன் தான் கண்ணகிக்கு இழைத்த இன்னலைக் குறித்து வருந்துகிறான். அப்பொழுது அவள் "ஐயனே! உம்மீது எனக்கு எள்ளளவும் கோபம் இல்லை. நீர் என்னைத் துறந்திருந்தமையால், 'அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்' ஆகிய இல்லறக் கடமைகளைச் செய்ய முடியாமல் போய் விட்டது. என் நிலையைக் கண்டு உம் தந்தை வருந்தினர். இவ்வாறு அவர் உள்ளம் வருந்துதற்கு நும் போற்றா ஒழுக்கம் காரணமாக இருந்ததே என்பதுதான் என்மனக் குறை" என்றாள். எவ்வளவு மென்மையுடன் அவள் கருத்தைத் தெரிவித்தாள் என்பது வியப்பை அளிக்கின்றது.

கோவலன் கொலையுண்டதை அறிந்து துயரடைந்து பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து நீதியை நிலை நிறுத்த "மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும், கையில் தனிச் சிலம்பும், கண்ணீரும்" ஆக நிற்கின்றாள். இந்த இடமானது வெகு அழகாக சித்தரித்துக் காட்டப்பெறுகிறது. மேனாட்டு நாடகாசிரியர்களுள் தலைசிறந்த ஷேக்ஸ்பியர் நாடகங்களிலே காணப்படுகின்ற காட்சிகளை விட உணர்ச்சி மிகுந்த காட்சிகள் நம் கண்முன்னே காட்டப்படுகின்றன. அதுவரை கற்பின் மென்மைக்கு இருப்பிடமாக உள்ள கண்ணகி அநீதியைப் பொறுக்கமாட்டாதவளாய், நீதியை நிலைபெறச் செய்ய சினங்கொண்டு வருகிறாள். "மனம் வருந்தி வந்த மாதே, நீ யார்?" என்று பாண்டியன் கேட்கும்பொழுது அவள்; "அரசே! கன்றை இழந்த பசுவொன்று மனங்கரைந்து கண்ணீர் வடிக்கக் கண்டு அக்கன்றைக்கொன்ற தன் அருமந்த மைந்தன் மீது தானே தேராழி ஊர்ந்து முறை செய்த சோழ மன்னனது புகழமைந்த புகார் நகரமே என் பதியாகும். ஊழ்வினைப்பயனால் உன் நகரில்

புகுந்து என் சிலம்பை விற்கப் போந்த வீதியில் உன் ஆணையால் கொலையுண்டிறந்த கோவலன் மனைவியே யான்'' என்று கொதித்துக் கூறினள். பிறகு சிலம்பை உடைத்து மாணிக்கங்களை கண்டவுடன் அரசன் தன் பிழையை உணர்ந்தான். "பொற் கொல்லன் சொல் கேட்டு பிழை செய்த யானே அரசன்'' என்று சொல்லி உயிர்நீத்தான்.

இந்த இடத்தில் சேரநாட்டுப் புலவரின் சித்திரத்தைப் பார்க்கும்பொழுது வியக்காமல் இருக்க முடியாது. "வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்து செங்கோலாக்கியது'' என்றார். வழி வழியாய் வளையாது நின்றது பாண்டியன் செங்கோல்; அதனை வல்வினை வளைத்தது; அப்படி வளைந்த செங்கோலை தன் உயிரைக் கொடுத்து நிமிர்த்தான் பாண்டியன் என்ற அருமைப் பாடு அமையச் செய்துள்ளார்.

பாண்டியன் இறந்த செய்தியைத் தெரிந்த அவன் மனைவி உயிர் நீத்தாள் என்பதை "தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள் போல் பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்'' என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்.

ஆரிய - திராவிட பூசலுக்கு எதிரான இலக்கியம்

இவ்வித சிறப்புகள் நிறைந்துள்ள காப்பியம் சிலப்பதிகாரம். சமயவேற்றுமையில்லாமல் எல்லாத் தெய்வங்களும் ஒரே நிலையில் போற்றப்படும் பான்மையும், கொள்கை மாறுபாடு சமூகப் பூசல்களுக்கு இடங்கொடாமல் இருப்பதையும், ஆரியத் - திராவிட மாறுட்டம், ஏழை பணக்காரன் என்ற மனக்கசப்பு ஆகியவை இல்லாமலும், அறமே அடிப்படையாகக் கொண்டு தமிழகம் நடைபெற்றது என்ற உண்மைகளையும் காணுமிடத்து நம் நாட்டுக்கு இப்பொழுது இருக்கும் நிலையில் பெறும் படிப்பினையைத் தருவதாக இக்காப்பியம் அமைந்திருக்கிறது. தமிழகம் குபேரச் செல்வம் படைத்ததாகவும் உலக முழுதும் தமிழகத்துடன் வாணிபம் செய்ததையும் காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிபம் காரணமாக கிரேக்கரும் பிறநாட்டாரும் திரளாக வந்து கூடியிருந்தனர் என்று கூறுவதிலிருந்து புலப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாக இருப்பது அந்நாடு மற்ற நாடுகளுடன் கொண்டும் கொடுத்தும் வாணிபம் செய்வதுதான் என்பது சிலப்பதிகாரத்தின் மூலம் நன்கு விளங்கப் பெறும். தமிழர் தனித்து வாழாது மற்ற நாட்டவருடன் சாதி, சமய வேற்றுமையின்றி வாழ்ந்த பண்பாடு நன்கு புலப்படுகின்றது.

ஆகவே, நம் நாட்டு மக்கள் பல துறைகளிலும் முன்னேறுவதற்கு சிலப்பதிகாரததிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினை அநேகம் இருக்கின்றன. அரசியல் காரணமாக மக்களை சமய வேற்றுமைகளினாலும் வகுப்புவாரி வெறுப்புகளி

ளூம் பிரித்து நாட்டில் குழப்பம் விளைவிக்க நினைக்கும் இந்நாளில் தமிழின் பேரால் - தமிழ் இலக்கியங்களின் பேரால் நம் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை அதிகரிக்கச்செய்யும் இக்காலத்தில், தமிழ் இலக்கியங்களைத் தற்கால அரசியல் பூசல்களுக்கு ஏற்ப ஆராய்ச்சி செய்து மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்ல முயற்சிக்கும் இக்காலத்தில், சிலப்பதிகாரம் போன்ற அருமபெரும் நூல்களில் செறிந்து கிடக்கும் பல உண்மைகளையும் மக்களை ஒன்றுபடுத்தி அவர்கள் வாழ்க்கை பல துறைகளிலும் மேம்பட்டதாகச் செய்யக் கூடிய கருத்துக்களையும், பொது மக்கள் உணரச் செய்யவேண்டியது மிக அவசியமாகிறது. அதுவே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகிறது.

இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு நாடகக் கழகங்களும், சினிமா படம் பிடிப்பவர்களும் பெரும் பணி செய்யக்கூடும். பொது மக்களுடைய 'மனப் போக்கு'க்குத் தகுந்தவாறு கதையை மாற்றாதபடி, நம் இலக்கியங்களில் நிறைந்து கிடக்கும் பல உயர்ந்த பண்பாடுகளையும் நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய கருத்துக்களையும் பொது மக்களின் மனதில் நன்கு பதியும்படி செய்வார்களேயானால் நாட்டிற்கு பெரும் பணி புரிந்தவர்களாவார்கள். பெரும்பான்மையோர் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் அடங்கிய நம் நாட்டில் நாடகத்தின் வழியாகவும் பேசும் படங்களின் வாயிலாகவும் நம் இலக்கியங்களின் சிறப்புக்களை பாமர மக்கள் அறிந்து பயன் பெற பெரிய சாதனமாகிறது.

இன்று ஒளவையார் நாடகம் நடிக்க இசைந்துள்ள திரு. டி. கே. சண்முகம் அவர்கள் இத்துறையில் செய்துவரும் பணி மிகவும் போற்றத்தக்கது. ஒளவையார் வரலாற்றை நடித்து பல உயரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் காட்டி வருவது போல, சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களில் உள்ள உண்மையான கருத்துக்களை மக்கள் அறியும்படிச் செய்யவேண்டிய தவசியம்.

காவியங்களை பழிப்பதும் எரிப்பதும் பகுத்தறிவா!

தெ. பொ. மீ.

[சிலப்பதிகார மாநாட்டில் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்]

சிலப்பதிகாரம் தமிழ்க் காவியங்களில் தலையாயதாகும். தங்கள் நாட்டுப் பாட்டுகளிலும், இலக்கியங்களிலும் அன்பு கொள்ளாத மக்களுக்கு நாட்டின் மீது அன்பு இருக்குமென்று நம்ப முடியாது. கவிதைப் பற்று, காவியப் பற்று இன்றி, நாட்டுப் பற்றைப் பற்றி ஓயாமல் பேசுவதெல்லாம் வெறும் பேச்சேயாகும். 'நமது காவியம்' என்ற உரிமையோடு ஆராயாது, 'பகுத்தறிவு' என்ற மமதையுடன் ஆராய்வோருக்கு

சிலப்பதிகாரத்தையும் எரிக்கத் தான் தோன்றும். சிலப்பதிகாரத்தையும் எள்ளி நகையாடும் மக்கள் இல்லாமல் இல்லை. பகுத்தறிவை, நமது முன்னோர்கள் தந்த காவியங்களை எல்லாம் பழிப்பதற்கா பயன்படுத்துவது? அதைவிட மூளையே இல்லாமல் ஒழிவதே நல்லதாகும்.

சிலப்பதிகாரக் கதை தமிழில் எழுதப்பட்டது மட்டுமல்ல. தமிழ் நாட்டவரின் சொந்தக் கதை. அதைப்போற்றி வளர்க்க எனக்கு உரிமையுண்டு. 'பகுத்தறிவு' பேசும் பெருமக்களுக்கு சிலப்பதிகாரத்தில் கவர்ச்சியில்லாமல் இருக்கலாம். ஆனல், உரிமைப் போரைப் பற்றி அதிகமாகப் பேசப்படும் இக்காலத்தில் காவியங்களைப் போற்றி வளர்க்க எனக்குள்ள உரிமையில் பிறர் தலையிட முடியாது.

தமிழகத்துக்கு எல்லை கண்ட இலக்கியம்

சிலப்பதிகாரம் நமது வாழ்விலே சிறந்த படிப்பினைகளைத் தருவதாகும். சேர - சோழ - பாண்டிய நாடென் மூன்று பிரிவாய் கிடந்த தமிழகத்தை ஒரே நாடாகச் செய்ய கனவு கண்டார் இளங்கோவடிகள். அப்புலவர் பெருமானின் கனவு இன்னும் நனவாகவில்லை. வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழகம் ஒரே நாடாக உருவாகக் காணோம்.

முக்கோண வடிவில் கிடந்த தமிழகத்தை ஒற்றுமைப் படுத்த வே கண்ணகி பிறந்தாள். சோழ நாட்டில் பிறந்து, பாண்டி நாட்டில் புகுந்து, சேர நாட்டில் தெய்வமாக சிறக்கின்ருள். பிளவுபட்ட தமிழகத்தை ஒற்றுமைப் படுத்துவது மூவேந்தர்களால் முடியாது என்பதற்காகவே, குடிமகள் ஒருத்தி மூலம் அதை முடித்துக்காட்ட முனைந்தார் இள்ங்கோவடிகள்.

சிலப்பதிகாரத்தில் ஒரு புதுமை புலப்படுகிறது. பிறநாட்டுக் காவியங்கள், இலக்கியங்களில் காணுத புதுமையைக் காண்கிருேம். பிறநாட்டுக் காவியங்களிலெல்லாம் அரசர்களோ, அரசிகளோதான் காவியத் தலைவராக-காவியத் தலைவியாக வருவார்கள். ஆனல், குடிமகள் ஒருத்தியை காவியத் தலைவியாகக் கொண்டு எழுதப்பட்ட காவியத்தைத் தமிழில் தான் காண்கிருேம். குமரிமுனையை தமிழகத்தின் தெற்கெல்லையாகக் கண்டார் இளங்கோவடிகள். ஆனல், அவருக்குப் பின் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் குமரிமுனைப் பிரதேசமாகிய நாஞ்சில்நாடு இன்னும் தமிழகத்திலிருந்து பிரிந்தே கிடக்கிறது.

இந்தக் கேரள நாடெனப் படும் திருவிதாங்கூர், சிலப்பதிகார காலத்தில் சேரநாடாகவே விளங்கிவந்தது. தமிழ் மூவேந்தரில் ஒருவரே அச் சேர வேந்தர். தமிழரது ஆற்றலைப் பழித்த வடவாரியர் மீது சீற்றங் கொண்டு இமயம்வரை படையெடுத்தான் சேரன் செங்குட்டுவன். அந்தோ! அப்பெரு வேந்தரின் மரபினரான கேரள மக்கள் தமிழ்ச்சொல்,தமிழ்மொழி, தமிழ் நாடகம் என்ருல் மனித உணர்விழந்து ஊளையிடுகின்றனர். சேரம் கேரள

மானாலும், எஞ்சியுள்ள நாஞ்சில் நாடேனும் நம் தமிழ்நாட்டோடு இணையும் நாள் எந்நாளோ?

கோவலன், வீரத் திருவுடையான். முதுமை எய்திய அந்தணன் ஒருவனை, பாகனுக்கு வசப்படாது மதமேறிய யானையொன்று கொல்ல நினைத்தது. யானையின் பிடியிலிருந்து மீள வழியறியாத அந்தணன் வாய் விட்டலறினான். அவனது கூக்குரல் கேட்ட கோவலன், தனது மடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த மகள் மணிமேகலையைத் தரையில் கிடத்திவிட்டு யானையோடு வீரப்போர் புரிந்து அந்தணனின் உயிரைக் காத்தான்.

கோவலன் வடமொழியிலும் வல்லவன். இருபதாவது நூற்றாண்டு தமிழர்களாகிய நாம் ஆங்கில மொழியைப் படிக்கலாமென்றால், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவலன் வடமொழியைக் கற்றிருந்ததில் பிழையில்லை. வடமொழியில் எழுதப்பட்ட ஓலையொன்றைக் கொண்டுவந்து கோவலன் கையில் கொடுத்து அறமியற்றப் பொருள் வேண்டினாள் ஒரு அந்தண மாது. அவ்வடமொழி ஏட்டைப் படித்து அதிலுள்ள பொருளையுணர்ந்து, அவள் வேண்டிய பொருளை தானமீந்தான் வள்ளல் கோவலன். இச்செயலால் கோவலன் வடமொழியும் அறிந்திருந்தான் என்பது புலனாகிறதல்லவா?

பெண்ணினத்தை, குலமகள் என்றும், பரத்தையரென்றும் இரண்டாகப் பிரித்தனர் முன்னோர். கற்பைக் குலமகளுக்கும் கலையையும் அழகையும் பரத்தையருக்கும் உரிமைப் படுத்தினர். இந்தப் பிரிவுபட்ட சமுதாயத்தைத்தான் எரிக்க விரும்பினார் இளங்கோவடிகள்! சிலப்பதிகாரத்தில் எரித்தும் காட்டினார். ஆனால், அது முற்றும் எரிந்து போகவில்லை. சமூகத்தைக் கொடுமைப் படுத்தும் அந்தப் பிரிவு, இன்று உலகம் முழுவதுமே பரவியிருப்பதைக் காண்கிறோம். குலமகள், கற்போடு கலையும் அழகும் உடையவளாகத் திகழவேண்டும். கலையும் அழகும் பரத்தைக்கே என்பது மறையவேண்டும்.

இளங்கோவடிகள் மக்களின் நலங் கருதியே சிலப்பதிகாரம் இயற்றினார். நாமும் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்கள் நலத்திற்கென்றே வாழ்வோமாயின் தமிழ்நாடு உய்யும்; தமிழ் மக்கள் உயர்வர்.

சிதம்பரனார் மறைந்தார்

நாகர்கோயில் பி. சிதம்பரம் பிள்ளை மறைந்த செய்தியறிந்து வருந்துகிறோம். பிள்ளை, சிறந்த தமிழறிஞர்; நகரசபைத் தலைவராக இருந்திருக்கிறார். சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டு உழைத்தவர். அந்த இயக்கம் பகுத்தறிவுப் பாதையிலிருந்து விலகி, பணக்காரர்களுக்கு பட்டம், பதவிகளைத் தேடிக் கொடுக்கும் முகாமாக மாறியவுடன் அதிலிருந்து விலகிவிட்டார். திருவிதாங்கூர் தமிழகம் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்பதில் ஆர்வமுடையவர். அன்னாரின் மறைவு தமிழருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அரசியலும் இலக்கியமும்

ம. பொ. சி.

[டாக்டர் மு. வரதராசனார் அவர்களைத் தலைமைதாங்குமாறு கேட்டுக் கொண்டு திரு. ம. பொ. சிவஞானம் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

மக்கள், அறிவு மட்டும் பெற்றிருந்தால் போதாது. ஒழுக்கமும் வேண்டும். ஒழுக்கத்தோடு பொருந்தாத அறிவுக்கு மதிப்பு தருதல் கூடாது. டாக்டர் மு. வ., ஒழுக்கத்தை உயிரென ஓம்பும் அறிஞராவார். அதனால் தான் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு அவரை அழைத்தோம்.

இந்த சிலப்பதிகார மாநாடு கூடுவதற்குக் காரணமாயிருந்தவன் என்ற முறையில், அதன் குறிக்கோளைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். மாநாட்டைக் கூட்டியுள்ள நானும் அதற்காக எல்லாவகையிலும் உதவி புரிந்த திரு. காமராசரும், மாநாட்டின் வெற்றிக்கு இரவு பகலாகப் பாடுபட்ட திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், சின்ன அண்ணாமலை ஆகியோரும் காங்கிரஸ்வாதிகள்தான். ஆயினும், இம்மாநாட்டில் கொடியேற்றவும், தலைமை வகித்து நடத்தவும் காங்கிரசைச் சாராத அறிஞர்களையே அழைத்திருக்கிறோம். நாங்கள் விரும்பியிருந்தால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தமிழ்ப் புலவர்களைக்கொண்டே இம்மாநாட்டை நடத்தியிருக்கலாம். பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனார் உட்பட பல புலவர்கள் காங்கிரசிலேயே உண்டு. எனினும், தமிழ் மொழியை, கட்சி என்னும் வேலிக்குள் சிறைப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. சிலப்பதிகார மாநாடு கூட்டி காங்கிரசுக்கு ஆதரவு தேடவேண்டிய தொல்லையும் எங்களுக்கில்லை.

நாளை இதே கண்ணகி பந்தலில் ஒரு அரசியல் மாநாடு கூட இருக்கிறது. ஆயினும், அம் மாநாட்டிற்கும் சிலப்பதிகார மாநாட்டிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இரண்டுக்கும் தனித்தனி வரவேற்புக்குழுவினர் உளர். நெடுநாட்களாகவே இப்படி ஒரு மாநாட்டைக் கூட்டவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது. இந்த சந்தர்ப்பம் அதற்குச் சாதகமாய் இருந்தது; கூட்டிவிட்டேன்.

நானும், புலவர் மீனாட்சிசுந்தரனாரும் திரு. காமராசரும் காங்கிரசார் என்ற முறையிலல்லாமல் தமிழ் இனத்தினர் என்ற முறையிலேயே இந்த மாநாட்டில் பங்குகொள்கிறோம். ஆம்; தமிழனைக்கு எங்கள் உழைப்பைக் காணிக்கையாக்கவே இம்மாநாட்டில் கலந்து கொள்கிறோம்.

இம்மாநாட்டில் குழுமியுள்ள மக்களில், அரசியலில் எங்களோடு மாறுபட்டோர் இருக்கலாம். ஆயினும் நாம் எல்லோ

ரும் தமிழர் என்ற உணர்ச்சியோடு இம்மாநாட்டில் பங்கு கொள்வோமாக !

காங்கிரசுக்கு மாறுபட்ட கட்சியினரும் இலக்கிய மாநாடுகள் கூட்டுகின்றனர். ஆனால், நானறிந்தவரை கட்சி மாநாட்டிற்கும் இலக்கிய மாநாட்டிற்கும் அங்கே வேற்றுமை காண முடியவில்லை. கட்சிக் கருத்துக்களை வற்புறுத்துவது பிழையன்று. ஆயினும் பிடிக்காத சாதியினரை - கட்சியினரை பழித்துப் பேசுவதற்கென்றே இலக்கியங்களைப் பயன்படுத்துவது கேவலமான செயல் என்பதை கூறித்தான் ஆகவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கும் நல்வழி காட்டுவதற்காகவே தேசீய வாதிகளாகிய நாங்கள் இந்த இலக்கிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். இன்றைய மாநாட்டுப் பேச்சாளர்கள், எந்த ஒரு தனி மனிதருடையவும் மனதைப் புண்படுத்தும் வகையில் ஒரு வார்த்தை கூட யாரும் பேசமாட்டார்கள் என்று நான் உறுதிகூற முடியும். இலக்கியத்தைத் தவறான வழிகளில் பயன்படுத்துவோரை திருத்தும் வகையில் பேசுவோமே ஒழிய, திட்டிப் பேசமாட்டோம்.

தமிழின் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியத்தின் வாழ்வுக்கும் தேசீய வாதிகள் ஒன்றுமே செய்ததில்லை என்று பழி கூறப்படுகிறது. தங்கள் கட்சி நலத்திற்கென்றே தேசீய வாதிகளின் வரலாற்றை திரித்துக் கூறுகின்றனர் - திரை போட்டும் மறைக்கின்றனர் சிலர். திரையைக் கிழித்து உண்மையைக் காட்டுகிறேன் காணுங்கள்.

கடந்த எழுபது ஆண்டுகளாக தேசீய வாதிகள் நடத்திய விடுதலைப் போரின் எதிரொலிதான் தமிழின் மறுமலர்ச்சி என்றால் மிகையன்று.

அரசியலில் உரிமை வாழ்வு பெறாத நாட்டில், மொழிக்கும் உரிமை வாழ்வு இல்லை. அந்நியராண்ட காலத்தில் நம்மிடம் நாட்டுப் பற்று இல்லாததோடு மொழிப் பற்றும் இல்லாதிருந்தது. காங்கிரஸ் மகாசபை தோன்றி, நாட்டுப் பற்றை வளர்த்ததோடு மொழிப்பற்றையும் கூடவே வளர்த்தது.

பண்டிதர்களின் தனிச் சொத்தாக இருந்த தமிழ் மொழிச் செல்வங்களை பாமர மக்களின் பொதுச் சொத்தாக்கியவர் பாரதியார்; அவர் ஒரு தேசீயவாதி. சிறையில் செக்கிழுத்து, கல்லுடைத்து சீரழிந்த காலத்திலும் கன்னித் தமிழால் கவிதை எழுதினார் - திருக்குறளுக்கு உரை இயற்றினார் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார். அவர் தேசீய வாதியல்லவா?

வெள்ளைக் கொடுங்கோலரின் அடக்குமுறைக்குத் தப்பி இங்கிலாந்துக்குச் செல்ல புறப்பட்டார் வ. வே. சு. ஐயர். அக்காலையில் இரண்டு பொருள்களை மட்டுமே தம்மோடு கொண்டு சென்றார் ஐயர். அவை, திருக்குறளும் கம்பராமாயணமுமாம். தேசீயவாதி நாட்டைப் பிரிய நேர்ந்தாலும் மொழியைவிட்டுப் பிரிய மாட்டான் என்பதற்கு இதைவிட சான்றுவேண்டுமா?

தமிழ் நாட்டு நடிகர்கள் வள்ளித் திருமணம் போன்ற புராண நாடகங்களை நடித்துக்

கொண்டிருந்த காலத்தில் தேச பக்தி, கதரின் வெற்றி, போன்ற தேசிய வீரமூட்டும் நாடகங்களை இங்கிலாந்தில் நடத்தி தமிழ் நாடகக் கலைக்குப் பெருமை தேடியவர் கிருஷ்ண சாமிப் பாவலர். அவர் ஒரு பழுத்த தேசியவாதி.

இதோ, நம் கண்முன்பு வீற்றிருக்கும் (தெ. பொ. மீ. யைக் காட்டி) பன்மொழிப் புலவர் அந்தப் பாவலரின் தம்பியாராவார். இப்பெருமகன் தமிழுக்குச் செய்துவரும் தொண்டினை மதிப்பிட முடியுமோ? இவர் 'தேசிய வாதியல்லவா?

இன்றைய நாடக உலகில் ஈடு இணையற்று விளங்கும் டி. கே. எஸ். சகோதரர்கள், கட்சி உணர்ச்சிகளுக்கு அப்பாற் பட்டவர்களாயினும், தேசிய உணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்களல்லர். சிறந்த தேச பக்தர்களாவார்கள். நாடகத் தமிழுக்கு அவர்கள் செய்துவரும் தொண்டினை மறுப்பார் யார்?

துன்பம் ஒன்றே தங்கள் முன்னிருந்தபோதுங்கூட தேசியவாதிகள் கன்னித் தமிழை மறந்தார்களில்லை. சிறையில் செப்பியேந்தி சீரழிந்த காலத்தில் தான் நான் சிலப்பதிகாரத்தைப் படித்தேன். மனைவி, மக்களைப் பிரிந்து துன்புற்ற காலத்தும் எங்களிதயத்தில் இன்ப உணர்ச்சியை வளர்த்துக்கொள்ள தமிழ் இலக்கியங்கள் பெரிதும் பயன்பட்டன.

தேசிய வாதிகள், மிக நீண்ட காலம் நடத்திய விடுதலைப் போரின் விளைவாக தமிழில் எத்தனை எத்தனைப் பத்திரிகைகள் தோன்றின. அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் தோன்றிய புதுப் புது நூல்களும் அளவில. தேசிய இயக்கத்தின் எதிரொலியாகத் தோன்றிய எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், கவிஞர்களும் கணக்கிலர். ஆகவே தேசிய வாதிகளை தமிழ் உணர்ச்சிக்குப் புறம்பானவர்கள் என்று கூறுவோர் கட்சிக் காழ்ப்புக் காரணமாக உண்மை வரலாற்றை மறைத்துப் பேசுவோரேயாவர்.

1931-ம் ஆண்டு முதல் இந்திய விடுதலை இயக்கம் புரட்சிப் பாதையில் சென்றது. 'நாடாறு மாதம், காடாறு மாதம்' என்ற நிலையில் தேச பக்தர்கள் அல்லலுற்றனர். குமரிமுதல் இமயம்வரை கொதித்தெழுந்த ஆவேசப் புரட்சி ஒருபுறம்; ஆணவம் பிடித்த ஆங்கிலேயரின் அடக்குமுறை இன்னொருபுறம். இந்த இரண்டிற்கும் இடையிலிருந்த காலத்தில் அகநானூற்றின் அழகையோ, புறநானூற்றின் பொலிவையோ, 'தோள் கண்டார் தோளே கண்டார்' என மிதிலைப் பெண்களின் காதலைக் கூறும் கம்பச் சித்திரத்தையோ நாங்கள் கவனித்திருக்க முடியாதுதான். உயிரைத் திரணமாக மதித்து உரிமைக்குப் போராடிய நாளில் இதைவிட வேறு நிலையை எங்களிடமிருந்து நீங்கள் எதிர் பார்க்கமுடியாது. ஆகவே, இந்த இடைக் காலத்தையே இலக்கணமாகக் கொண்டு எங்களைக் குறைகூறுவது, ஒன்று அறியாமை; அல்லது, அறிந்தே சொல்லும் பொய்.

இந்த சிலப்பதிகார மாநாடே எங்களைக் குறைகூறுபவர்களுக்குப் பதிலளிக்கும். தேசியவாதிகளாகிய நாங்கள், இலக்கியத்தை சாதிவெறி என்னும் எருப்போட்டு, சுயநலமென்னும் நீர் பாய்ச்சி, கட்சியென்னும் வேலியிட்டு வளர்க்க விரும்பவில்லை. உலகமெங்கும் பரந்து கிடக்கும் மக்கள் சமுதாயத்தின் நலன் ஒன்றை மட்டுமே கருதி இலக்கியப் பணியாற்ற விரும்புகிறோம். இம்மாநாடு அதற்கொரு சான்று. அரசியலில் எங்களோடு மாறுபட்ட கருத்துடையவர்களும் எங்கள் வழியைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன். அரைசியல் பிழைத்தோரை அறமே கூற்றுவன் வடிவில் வந்து கொல்லும் என்ற சிலப்பதிகார நெறியை எடுத்துக் காட்டி, இன்றைய அரசினரை எச்சரித்தார் அறிஞர் சேதுப்பிள்ளை. எச்சரிக்கை வேண்டியதுதான். 250 ஆண்டுகளாக ஆங்கிலேயரால் விளைந்த சீரழிவுகளை இன்றைய அரசினர் சீர்திருத்தவும் வேண்டும். ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட சீரழிவுகளின் எதிரொலிக்கு இன்றைய அரசினரைக் குற்றவாளி கூண்டில் நிறுத்த முடியாது.

தேசியவாதிகளாகிய நாங்கள் சிலப்பதிகாரம் காட்டிய செந்நெறிப்படி வாழ விரும்புகிறோம். எங்களிடம் குற்றங்குறைகளிருப்பின், மாநாட்டுப் பேச்சாளர்கள் அச்சமின்றி எடுத்துரைக்கலாம். எங்களுக்கு சிந்தனைசக்தி உண்டு. பிறர் கூறும் குறைகளைப் பொறுமையோடு கேட்கும் சகிப்புத் தன்மையும் உண்டு.



சிலப்பதிகார மாநாட்டில் ம. பொ. சி. பேசுகிறார்.

வாழ வழிகாட்டும் இலக்கியம்

டாக்டர் மு. வ.

[சிலப்பதிகார மாநாட்டில் டாக்டர் மு. வ. நிகழ்த்திய தலைமையுரை].

சிலப்பதிகாரம் என் தாய் நாட்டின் காவியம்; என் தாய் நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட காவியம்; அதனால் அது என்னை வளர்த்து பண்படுத்தும்ஆற்றல் மிகுந்த காவியம் என்று உணர்கிறேன்; அவ்வாறே பயன்தருவதையும் கண்டு வருகிறேன். இந்த காவிய மாநாடு இத்துறையில் சிறந்த தொண்டு ஆற்ற வல்லது என்று நம்புகிறேன்.

டாக்டர் மு. வ. பேசுகிறார்.

இது சிலப்பதிகார காவியத்தைப் பாராட்டிக் காவியத் தலைவியைப் போற்றுவதற்காகக் கூடிய கூட்டம். ஆகையால் காவியத்தில் உள்ள நயங்களையும் பிற சிறப்புகளையும் ஆராய்ந்து விளக்குவதற்கு இங்கு இடம் இல்லை; நூலில் உள்ள புனைந்துரைகளை ஆய்ந்துரைப்பதற்கு இங்கு இடம் இல்லை. மெகாலே போன்ற அறிஞர்களே வரலாறுகளையும் பொய் கலவாமல் எழுத முடியவில்லை. பொதுவாக மனித உள்ளமே உண்மையை உள்ளவாறு உரைப்பதிலே ஆர்வம் கொள்வதில்லை. விருப்பு வெறுப்புக் கனிந்த கலையுணர்வுடன் கலைஞர் எழுதும் காவியங்களில் கற்பனை இயல்பாகவே இடம் பெறும். ஆயின் ஒன்றுமட்டும் நினைவிலிருக்க வேண்டும். இளங்கோவடிகளுக்கு கலையில் இருந்த ஆர்வத்தைவிட, அறநெறியில் இருந்த ஆர்வமே மிகுதியாகையால் கற்பனைப் புனைந்துரை குறைந்த அளவில் இடம் பெற்றுள்ள காவியமாக இது திகழ்கிறது என்பது தெளிவு.

காவியம் எழுதிய புலவர் வெறும் கலைஞராக மட்டும் இருந்தால், அதன் பலன் வேறு; படிப்பவர்க்குக் கலையுணர்ச்சி ஊட்ட அந்தக் காவியம் பயன் படும். சிலப்பதிகார ஆசிரியர் கலைஞராக மட்டும் நின்று

அதனை எழுதவில்லை; கலைச் செல்வத்தில் திளைத்த பெருமை மிக்க அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்து அறவோராய், வாழ்க்கையைத் தெளிந்து உலகத் தொண்டு ஆற்றிய சான்றோர் இளங்கோவடிகள். திருவள்ளுவர் பிறந்த தமிழ் நாட்டில் அவர்க்கு அடுத்தபடி தோன்றிய பெருமகன் அவரே. ஆகையால் இந்தக் காவியம் அறம் பழுத்த சான்றோர் ஒருவரின் சிறந்த துணையை நல்கி வாழ்க்கையைத் தூய்மைப் படுத்த வல்லதாக விளங்குகிறது.

துறவறத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய இளங்கோவடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது எது? கவர்ந்து இந்த அரிய காவியத்தை எழுதச் செய்தது எது? இல்லறத்தின் மணிவிளக்காய் வாழ்ந்து உற்ற துன்பமெல்லாம் பொறுத்துத் தன் கடமையைச் செய்து வாழ்க்கையை இழந்த பெண் ஒருத்தியின் கற்பே அந்தத் துறவியின் உள்ளத்தைக் கவர்ந்தது.

இன்றைய உலகத்தில் காணும் காட்சிகளை இருவகையாகக் கூறலாம். துன்பமே பட்டுப் பட்டு, அது இயற்கை என்று உணர்ந்து துன்பச் சேற்றில் நெளியும் வாழ்க்கையின் காட்சிகள் ஒருவகை, மற்றொரு வகை, பிறர்க்குத் துன்பம் விளைத்து விளைத்து, அதனால் உலக வாழ்க்கையில் ஆற்றலைப் பெருக்கிப் பெருக்கி ஆடம்பரக் கோட்டைகள் கட்டி இறுமாந்திருக்கும் வாழ்க்கையின் காட்சிகள். இந்த இருவகையும் உள்ள உலகத்தில் மனச்சான்று என்னும் சரக்கைக் காணவே முடியாது. அதனால் துன்பம் செய்வோர்க்கு மட்டும் அல்லாமல், துன்பப்படுவோர்க்கும் மனச்சான்று இல்லாமல் போகின்றது. இந்த நிலை நீடிக்கும் வரையில் அறநூல்கள் பெருகியும் பயன் விளையாது; காந்தி அடிகள் போன்ற அறத்தின் திருவுருவங்கள் பெருகியும் பயன் விளையாது. "இந்த உலகத்தில் உண்மைக்கும் நேர்மைக்கும் இடம் எது? நன்றி கெட்ட உலகம்" என்று துன்பப்படுவோர் சோர்ந்து மடியும் காலம் இது. "இந்த உலகத்தில் இரக்கமும் நன்னெறியும் கொண்டு வாழ்ந்தால் உயிர் வாழவே முடியாது; மற்றவர்களைப்போல் நாமும் எப்படியாவது சுரண்டினால்தான் வளமாக வாழமுடியும் -- நெறியையும் முறையையும் எண்ணித் தயங்கினால் ஓட்டாண்டியாய் துன்பத்திற்கு ஆளாக வேண்டும்." என்று துன்பப்படுத்துவோரும் கல்நெஞ்சம் பெறும் காலம் இது.

ஆனால், சிலப்பதிகாரத்தில் காணும் உலகம் முற்றிலும் வேறானதாக இருக்கிறது. பெண் ஒருத்தி பெரும் துன்பத்திற்கு ஆளானாள்; அவளும் திக்கற்றவள்; வெளிநாட்டைச் சார்ந்தவள்; நேற்றுத்தான் நகரத்திற்கு வந்தவள். அந்த பெண்ணுக்குத் துன்பம் விளைவிக்கக் காரணமாக இருந்தவனோ, பெரிய அரசன்; தான் இட்ட சட்டத்திற்கு குறுக்கே பேசுவோர் இல்லாத வகையில் நாட்டின் தலைமைப் பெற்றுத் தனியரசு செலுத்தியவன். சிலப்பதிகாரம் என்ன காட்டுகின்

றது? அந்தப் பெண்ணின் துயரக் கண்ணீர்க்கு முன்னே பெரும் படை உடைய வேந்தன் சோர்ந்து மடிவதைக் காட்டுகிறது. துன்புறுத்துவோரின் பெரிய ஆற்றல், துயரப்படுவோரின் சிறு கண்ணீர்த் துளிகளுக்கு முன் தேய்ந்து மாய்வதைக் காட்டுகின்றது;

அணுக்குண்டால் நாடுகளை அழிக்கத் திட்டமிடும் கெடுமனம், துப்பாக்கி முனையால் அறிய வாழ்வுகளைப் பாழ்படுத்தும் கொடுமனம், சட்டத்தின் நுணுக்கங்களால் ஏழை மக்களை வதைக்கும் பாழ் நெஞ்சம், கள்ள வாணிபத்தால் எளியோரை உறிஞ்சிப் பருகும் அட்டை மனம், அரிசியில் தவிட்டையும், பருப்பில் கல்லையும் கலந்தாவது பணம் சேர்த்துப் பெருவாழ்வு வாழக் கருதும் விலங்கு மனம் இவை மலிந்துள்ள இந்த உலகச் சிறையிலிருந்து சிறிது நேரமாவது உயர்ந்த நல்லுலகத்தில் - கற்பனையுலகத்தில் - பரந்து திரியச் சிலப்பதிகாரம் வாய்ப்புத் தருகிறது. பெண் ஒருத்தியின் கண்ணீரைக் கண்டு தன் தவறு நினைத்து "யானோ அரசன்? யானே கள்வன்" என்று உயிர் துறக்கும் மனச் சான்றைக் காட்டும் காவியம் இது. கற்பனையுலகத்தில் திளைத்து மகிழ்ந்து வெளியேறிய உடனே "நாம் வாழும் இந்த உலகம் அப்படித் திருந்தாதா!" என்று எண்ணி எண்ணி ஏங்கும்படியாகச் செய்கிறது; நல்லுலகம் அமைக்க நம்மைத் தூண்டுகிறது. அபினி, கஞ்சா போல் கற்பனையின் போதையை மட்டும் ஊட்டி நம்மைச் சோம்பேறிகளாகவும், பாராட்டும் கருவிகளாகவும் செய்துவிடாமல், வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளத் தூண்டும் சிறந்த தூண்டுகோலாக அமைகிறது. சுருங்கக் கூறின், தப்பித்து ஓட வழிகாட்டி கோழையாக்கவில்லை; எதிர்த்து வெல்லத் துணைபுரிந்து வீரனாக்குகிறது.

இளங்கோவடிகள் கண்ட தமிழகம் மூன்று பிரிவுகளாக இருந்தும் பண்டைத் தமிழகத்தின் மூச்சு ஒன்றாகவே இருந்தது. அந்த மூச்சுதான் தமிழ். அத்தகைய நல்ல நிலை இன்று இல்லாத குறையால் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரை ஆண்டு வந்த தமிழ் மொழி, இன்று பாராளுமன்றத்திலும் ஒலிக்கவில்லை; நீதிமன்றங்களிலும் முழங்கவில்லை; ஆட்சி நிலையங்களிலும் விளங்கவில்லை. கல்வி நிலையங்களிலும் ஒதுக்கிடமே பெற்றுள்ளது. தமிழர்க்குள் ஒற்றுமை இல்லாதவரையில் உலகம் தமிழுக்குத் தரப்போவது ஒதுக்கிடமோ என்று எண்ணி எண்ணி வருந்துகிறேன்.

இளங்கோவடிகள் சேர நாட்டைச் சார்ந்தவர்; சேர நாட்டு மன்னனின் தம்பி; ஆயினும் அவர் குறுகிய பற்றுடன் நிற்கவில்லை; சோழநாட்டைப் புகழ்கிறார்; பாண்டிய நாட்டைப் புகழ்கிறார்; சோழ - பாண்டிய வேந்தர்களின் பெருமையை உள்ளவாறு எடுத்துரைக்கின்றார். தம் தமையன் செங்குட்டுவன் வாயிலாகவும் எடுத்துரைக்கின்றார்.

அறநெறியில் நின்ற சான்றோராதலின், உலகம் வாழவேண்

டும் என்னும் மிகப் பரந்த நோக்கம் அடிகளின் உள்ளத்தில் விளங்கியது. அத்தகைய உலகப் பொது நோக்கம் தமிழனுக்கு என்றும் உள்ளதே ஆகும். வெளி நாடுகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் உதைபடும் காலம் வந்த பிறகும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று முழங்கத் தமிழனுடைய வாய் தயங்கியது இல்லை. ஆயின், மற்ற வீட்டுத் தாய்மார்க்குத் தன் தாய் அடிமையாய் ஏவல் புரியக் காணும் இழிநிலை தமிழனுக்கு இருத்தலாகாது. மற்றத் தாய்மார்கள் தன் தாயை இழிவுபடுத்தும் நிலையைப் பொறுக்க இயலாத வீரநெஞ்சம் சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் படையெடுப்பில் விளங்குகிறது. தன்னுடன் இணங்கிவந்த அரசரை நட்புரிமையுடன் தழுவுவதும், தனக்கு மாறுபட்ட மன்னரைப் பகைத்து வெறுப்பதும் சிலப்பதிகாரத்தின் அரசியலாகும்.

நினைத்துப் பார்க்க வியப்பாக இருக்கிறது; இன்று கண்ணகியை நாம் போற்றுகிறோம்; பாராட்டுகிறோம்; தமிழர் தவிர வேறு இனத்தாரிடையே கண்ணகி பிறந்திருந்தால், இன்று உலகம் புகழும் தலைவியரிடையே முதன்மை பெற்றிருக்க முடியும். ஆனால் தமிழினம் விளம்பரத்தை விரும்பாத, விரும்பினும் செய்துகொள்ள அறியாத, ஓர் இனம்; தன்னைப் பற்றி வரலாறு எழுதி வைக்கவும் முயலாத ஒருவகை இனம்; தன் செல்வத்தை எல்லாம் பிறர் தமது தமது என்று கூறிப் பெருமையே கொண்டாலும் பொறுமையோடு மகிழ்ந்திருக்கும் ஒரு தனி இனம்; அதனால் உலகம் போற்றத்தக்க கற்பரசியான கண்ணகி தமிழகத்தில் தமிழரும் நன்கறியா தலைவியாக ஒதுங்கியிருப்பதைக் காண்கிறோம். ஆயினும் எப்படியோ கற்றவரேனும் அறிந்து போற்றத்தக்க நிலை ஒருவாறு இருக்கின்றது. செங்குட்டுவன் எழுப்பிய கற்கோயில் இதற்குக் காரணம் அன்று; அவன் தம்பியர் எழுப்பிய சொற்கோயிலே உண்மையில் காரணம் ஆகும். இதைக் கொண்டே இன்று நாம் கண்ணகியின் பெருமையை உணர்ந்து போற்றுகிறோம். ஆனால், நம் போற்றுதல், சொற்கோயில், கற்கோயில் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமான ஒன்று மறக்கமுடியாததாக உள்ளது. அது எது? அது தான் கற்பரசி ஒருத்தி அந்தக் காலத்திலேயே கண்ணகியின் கற்பை உணர்ந்து போற்றி உலகத்திற்கு இட்ட ஆணை.

கணவன் பிரிந்தபின் பல ஆண்டுகள் வீட்டிலிருந்தே தவம்புரிந்த கண்ணகி திருச்செங்குன்றத்தின் மேல் பதினான்கு நாள் வேங்கைமர நிழலில் நின்று புரிந்த தவத்தை மலைவாழ் மக்கள் கூறக் கேட்டான் வேந்தன் செங்குட்டுவன்; கேட்டதும் வியந்து தன் துணைவியைப் பார்த்தபோது, அவள்,

"பத்தினிக் கடவுளைப்
பரசல் வேண்டும்"

என்று கூறினாள். அவளுடைய திண்ணிய எண்ணமே அன்றும் நிறைவேறியது; தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இலங்கை

(37-ம் பக்கம் பார்க்க.)

'ஔவை' சண்முகத்தின் அற்புத நடிப்பு

❋

கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டின் இறுதியில், டி.கே.எஸ். சகோதரர்களால் "ஔவையார்" நாடகம் நடிக்கப்பெற்றது. வழக்கம்போல் திரு. டி.கே. சண்முகம் ஔவை வேடத்தில் தோன்றி மிக அற்புதமாக நடித்தார். நகர மக்களும், மாநாட்டிற்கென வெளி ஜில்லாக்களிலிருந்து வந்திருந்த தேசீயத் தோழர்களும் தமிழரசுக் கழகத் தோழர்களும் நாடகத்தைக் காண குழுமியிருந்தனர். ஔவை, தொண்டமானுக்குப் புத்தி கூறும்போது, 'தமிழன் வலுச் சண்டைக்குப் போகமாட்டான். வந்த சண்டையையும் விடமாட்டான்" என்று கூறியபோது, அவையில் பலத்த கைதட்டல் எழுந்தது. கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய 'பெருமை கொள்வாய் தமிழா' என்ற பாடலை பாரி மகளிரோடு சேர்ந்து ஔவையார் பாடியதைக் கேட்ட ஒவ்வொருவரும் உணர்ச்சிமேலிட்டு ஆனந்தக் கண்ணீர் பொழிந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

மறுநாள் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டின் இறுதியில் "முதல் முழக்கம்" நாடகம் நடைபெற்றது. முடிவில், திரு. ம. பொ. சி., டி. கே. எஸ். சகோதரர்களைப் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது:

"ஔவை நாடகத்தை கணக்கற்றமுறை கண்டுகளித்தேன். ஆனால், ஒவ்வொரு முறையும், நண்பர் சண்முகம் ஔவையாக வரும் ஒவ்வொரு சீனிலும் ஒரு இளைஞர்தான், இப்படி கிழவியாக நடிக்கிறார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. காளைப் பருவம்; கட்டுறுதி வாய்ந்த உடல்; சுருக்கம் காணாத முகப் பொலிவு; ஆண் பிறவிக்கேற்ற அழகு; இத்தனையும் வாய்ந்த ஒருவர் கூனிக்குறுகி சுருக்கம் விழுந்த முகமும், பற்களையே காணமுடியாதவாறு பொக்கை விழுந்த வாயும், தழுதழுத்த பேச்சும் காட்டி உண்மை ஔவையாராகவே நடிக்கும் அவரது திறமை மிக மிக மெச்சத்தருந்தது. ஏதோ பண்டை முனிவர்கள், சாபம் கொடுப்பதில் சமர்த்தர்கள் என்கிறார்களே, அந்த சக்தி எனக்கிருந்தால், ஔவை வேடத்தில் தோன்றும் சண்முகம், 'உண்மையான ஔவையாகவே போகக்கடவது' என்று சபித்துவிடுவேன். அப்போது, ஊர் சுற்றித் தமிழ்த் தொண்டு செய்ய, இந்தக் காலத்திலும் ஒரு ஔவை கிடைத்துவிடுவாள் அல்லவா? உலகிலுள்ள நடிப்புப் புலவர்களோடு நண்பர் சண்முகத்தை ஒப்பிட்டால் உண்மையான கிழவியாகவே நடிக்கும் அவரது ஆற்றலுக்கு சர்வதேசப் பரிசு கிடைத்துவிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

நண்பர் டி. கே. பகவதி, வீரபாண்டியக் கட்டபொம்மனை நடிப்பதற்காகவே பிறந்தவரோ என நினைக்கிறேன். அவர் வீரபாண்டியனை வேடம் புனைந்துவிட்டால், நாம் படத்தில் காணும் உண்மை வீரபாண்டியனைகவே காட்சியளிக்கிறார். அவருக்கும் எனது பாராட்டு."

மற்றும், கம்பெனி நடிகர்கள் பலரையும் திரு. ம. பொ. சி. பாராட்டிப் பேசினார்.

தமிழகம் தனியரசு நாடாக வேண்டும்

தாமதிப்பதால் கேடு நேரும்

ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆகிய தேசிய இனத்தவர், இன்றுள்ள 'மாடல் திராவிடஸ்தான'கிய சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து தனித்தனி அரசை அமைத்துக்கொள்ள கிளர்ச்சி செய்துவருகின்றனர்.

தமிழ் மக்களாகிய நாமும் தமிழகம் தனியரசு நாடாக வேண்டுமென்று விரும்புகிறோம். இந்நிலையில், தமிழரில் ஒரு சிறு கூட்டத்தார் தமிழகத்திலிருந்துகொண்டே திராவிடஸ்தானுக்குக் கிளர்ச்சி செய்வது அரசியல் ஞானமற்ற செய்கை.

தமிழகம் தனி மாகாணமாகவில்லையே; தமிழ், அரசு மொழி ஆகவில்லையே என்ற வருத்தம் தமிழ் மக்களிடையேயும், தமிழ் அறிஞர்களிடையேயும் இருந்து வருகிறது. இந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டுதான் 'திராவிடஸ்தான்' கூச்சல் போடுகின்றனர் திராவிடத்தார்கள். ஆகவே, காங்கிரஸ் மேலிடத்தாரும், மத்திய அரசினரும் இன்னும் காலம் தாழ்த்தாமல் சென்னை மாகாணத்தை மொழிவழி நாடுகளாக உடனடியாகப் பிரிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தவேண்டும்.

ஆந்திர மாகாணம் பிரிவது தற்சமயம் இயலாதாயின், தமிழகத்தை மட்டுமேனும் சென்னை மாகாணத்திலிருந்து உடனடியாகப் பிரித்துவிட வேண்டும்.

தமிழகம் தனி மாகாணமாகப் பிரிக்கப்படுமானால், 'திராவிடஸ்தான்' இயக்கம் சவக்குழிக்குச் சென்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

மொழிவழி மாகாணங்கள் சுயாட்சி பெற்றனவாயிருக்க வேண்டும். போக்குவரத்து, வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, சுங்கம் ஆகிய அவசியமான அதிகாரங்கள்மட்டுமே மத்திய அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்.

இன்று காஷ்மீர், எந்த சுயநிர்ணய உரிமையுடன் இந்திய சமஷ்டியில் அங்கம் வகிக்கிறதோ, அதே உரிமை தமிழகத்துக்கும், மற்றும் எல்லா மொழிவழி மாகாணங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

[திராவிட இயக்க எதிர்ப்பு மாநில மாநாட்டில் திரு. ம. பொ. சி. நிகழ்த்திய தலைமையுரையின் ஒரு பகுதி.]

(35-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதலிய வெளிநாடுகளிலும் கண்ணகிக்கு வழிபாடு நடைபெற்றது. இன்னும் அந்த ஆணையே நிறைவேறுகிறது; பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பொது மக்கள் மறந்திருந்த கண்ணகியின் புகழ் மீண்டும் விளங்கத் தொடங்குகிறது. அத்துறையில் இது முதல் முயற்சி. கற்பு நெறியில் நின்று வாழ்க்கையை விளக்கிய ஒரு பெண் மற்றொருத்தியைப் போற்ற வேண்டும் என்று எண்ணிய எண்ணம், முற்றத் துறந்த துறவியான இளங்கோ வடிகள் முதல், பெரு வேந்தர்கள் வரை யாவராலும் போற்றப்பட்டு நிறைவேறியது. ஆகையால் காவிய மாநாடு கூட்டிப் பாராட்டும் இம்முயற்சியும் இனிது நிறைவேறுவது உறுதி!

திரு. வி. எஸ். தியாகராச முதலியார்

'மதராஸ் மனதே' என்று ஆந்திரத் தலைவர்கள் ஆரவாரித்தபோது, 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்று முரசு முழங்கியது. தமிழரசுக் கழக வளர்ச்சிக்குப் பணிபுரியும் வீர இளைஞர்கள் உண்மையிலேயே தலைநகருக்காக தங்கள் தலையைக் கொடுக்கும் வாய்ப்பு நேராதா? என காலத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தனர்.

1950 ஜனவரி 26-ல் ஆந்திரம் தனி நாடாகும் என்ற நிலை ஏற்பட்டது. அது காரணமாக, "சென்னை யாருக்கு?" என்றப் பிரச்சினை சூடேறியது. ஐயத்திற்கிடமின்றி சென்னை தமிழகத்தையே சாரும் என காங்கிரஸ் மூவர் கமிட்டி தீர்ப்பளித்திருந்தும் ஆந்திரரின் ஆர்ப்பாட்டம் அடங்கவில்லை. 'மனவாடு'களின் கூச்சலுக்கஞ்சிய மேலிடத்து அரசினர், சென்னையைத் தமிழருக்கும் தராமல், ஆந்திரத்திலும் சேர்க்காமல் டில்லியின் நேர் நிர்வாகத்தின் கீழ் வைத்துக்கொள்வதென்ற முடிவுக்கு வர இருந்தனர். மேலிடத்தவரின் உள்ளத்தையறிந்த தமிழ் மக்களின் உணர்ச்சி பொங்கிற்று. அந்த உணர்ச்சிப் பெருக்கு ஒரு மாநாடாக உருவாயிற்று, அதுதான் 1949-ம் ஆண்டு நவம்பரில் சென்னை ஸ்டேடியத்தில் நடந்த எல்லை மாநாடாகும். அம்மாநாடு நடப்பதற்குக் காரணமாயிருந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழரசுக் கழகத்தினராவார்கள். என்றாலும், மாநாட்டின் சிறப்பிற்குக் காரணமாயிருந்தவர் வடபாதி மங்கலம் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் ஆவார். அவர் தக்க சமயத்தில் முன்வந்து வரவேற்புக் குழுவின் தலைமைப் பதவியை ஏற்று, மாநாட்டைச் சிறப்புற நடத்திக் கொடுத்தார். அம்மாநாட்டில், சென்னையைப் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் டில்லியின் கருத்தைத் திருத்தியது. அதனால் தமிழகத்தின் தலைநகர் தப்பியது. ஆம்; தலைகளைக் கொடுக்கவேண்டிய அவசியமில்லாமலேயே தலைநகர் காப்பாற்றப்பட்டுவிட்டது. அதற்கு முக்கிய காரணமாயிருந்த, திரு. முதலியார் முரசின் அட்டைப் பக்கத்தை அலங்கரிக்கிறார்.

திரு. முதலியார் அவர்களின் பெரு முயற்சியின் காரணமாக திருவாரூரில் தமிழ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதை, மக்கள் அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள்.

அண்மையில் சென்னையில் சிலப்பதிகார மாநாடு மிக வெற்றிகரமாக நடைபெற்றதற்கும் திரு. முதலியார் அவர்களே காரணகர்த்தர் ஆவார். தமிழ் மொழியின் வரலாற்றிலேயே சிலப்பதிகாரத்திற்கென மாநாடு கூடியது இதுதான் முதல் தடவை. அத்தகைய பெருமை மிக்க மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து நடத்தி வைக்கும் பேறு திரு. முதலியார் அவர்களுக்குக் கிடைத்தது.

திரு. முதலியார் தமிழரசுக் கழகத்தின் உறுப்பினரல்லர். ஆயினும் தலைநகர் காத்தல், வடக்கு - தெற்கு எல்லைகளை மீட்டல், தமிழ் நிலத்தைத் தனியாக்குதல், தமிழை அரசு மொழியாக்குதல் ஆகிய கழகக் கொள்கைகளில் திரு. முதலியாருக்கு பூரண உடன்பாடுண்டு. அதுமட்டுமல்ல, அக்கொள்கைக்காக செயலாற்ற வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் திரு. முதலியார் முன்வந்து பாடுபடத் தயங்கியதில்லை. அவர் நீடூழி வாழப் பிரார்த்திக்கிறோம்.

—●—

மதிப்புரை

முத்தமிழ்ச் சோலை

(திங்கள் வெளியீடு)

[ஆசிரியர்: இரா. சுப்பிரமணியன், முத்தமிழ்ச் சோலைப் பதிப்பகம், பொள்ளாச்சி. விலை நான்கணா.]

இடையில் சில காலம் நின்றிருந்த முத்தமிழ்ச் சோலை மீண்டும் பூத்துக்குலுங்கி புதுமணம் வீசத் தொடங்கிவிட்டது. பெயருக்கேற்ப இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் சிந்தைக்கு விருந்தளிக்கும் கருத்துக்கள் நிறைந்துள்ளன. முத்தமிழ்ச் சோலை தமிழரசுக் கழகத்தின் குறிக்கோளைத் தழுவிவருவது. தமிழரசுக் கொள்கைக்கு முட்டுக் கட்டையிட்டுவரும் திராவிடத்தார்களின் பிற்போக்குத் தனத்தை சாடும் பகுதிகள் சுவைமிக்கவை. தமிழரசுக் கழகத் தோழர்களான கவிஞர் கா. மு. ஷெரீப், கவிஞர் வானம்பாடி, கள்ளக்குறிச்சி ஜனார்த்தனம் ஆகியோர் எழுதுகின்றனர். தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டிய நல்ல ஏடு. "பைந்தமிழன்" என்ற செந்தமிழ் வல்ல இளைஞரை துணையாசிரியராகவும் கொண்ட இவ்வேடு என்றென்றும் நின்று நிலைப்பதாக.

சோஷலிஸம் எதற்கு?

ஆசிரியர்: ஜெயப்பிரகாஷ் நாராயணன். வெளியிட்டோர்: சோஷலிஸ்ட் பதிப்பகம். விற்பனை உரிமை: வைஜயந்தி பிரசுரம், 70, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10. விலை அணா 12.

அரசியல் விடுதலை பெற்ற இந்தியா, பொருளாதாரப் புரட்சியொன்றையும் எதிர்நோக்கிச் செல்கிறது. ஆண்டான்—அடிமை ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமையின்றி எல்லோரும் ஓர் நிலையில் வாழ வழிகாட்டுகிறது சோஷலிஸ சாத்திரம். அந்த சாத்திரப்படி சமுதாயம் அமைய வேண்டியதன் அவசியம் இந்நூலில் விளக்கப்படுகிறது. படிக்க வேண்டிய நூல்.

சோற்றுப் பஞ்சம்

எழுதியவர்: எம். எஸ். வி. மூர்த்தி. வெளியிட்டோர்: சோஷலிஸ்ட் பதிப்பகம். விற்பனையாளர்: பாரி நிலையம் சென்னை-1. விலை அணா 3.

உணவுப் பஞ்சம் மக்களை, வாட்டி வதைப்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. ஆட்சியாளர்கள் பஞ்சத்தைப் போக்க பாடுபடுகிறார்கள் என்றாலும், மேலும் மேலும் பாடுபடவேண்டுமென்று கிளர்ச்சி செய்யவேண்டியது அவசியமே. ஆனால் உணவுப் பஞ்சத்தைப் பற்றி பேசுகின்ற - எழுதுகின்ற அரசியல் வாதிகள், அரசாளுங் கட்சி மீது தங்களுக்குள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்களேயன்றி, பஞ்சத்திற்கான காரணம் என்ன - அதைப் போக்குவதற்கான திட்டமென்ன என்பதைப் பற்றி சொல்வதில்லை. அந்த அவநிலைக்கு விதிவிலக்காக உள்ளது இந்நூல். பஞ்சத்திற்கான காரணங்களை நடுநிலைமையுடன் ஆராய்ந்து, அதை போக்குவதற்கான வழிகளையும் தெளிவாகக் கூறுகிறது. இந்த நூல் உணவுப் பஞ்சங்களை போக்குகிறதோ இல்லையோ - அதைப்பற்றிய உண்மைகளையேனும் நமக்கு அறிவிக்கிறது.

வரப்பெற்றோம்.

உலக சர்க்கார் இயக்கம்:

இயற்றியவர்: டாக்டர் ராம் மனோகர்லோஹியா. தமிழாக்கம்: எஸ். சங்கரன். வெளியிட்டோர்: சோஷலிஸ்ட் பதிப்பகம். விற்பனையாளர்: பாரி நிலையம் சென்னை-1. விலை அணா 6.

எதுவேண்டும் சொல் தமிழா!

(எதுவேண்டும் சொல் மனமே எ. மெ.)

கவிஞர் கு. சா. கி.

*

எதுவேண்டும் சொல் தமிழா—உனக்கு
எதுவேண்டும் சொல் தமிழா

சுதந்திரத் தமிழாட்சி வேண்டுமா—பிறர்
தொடர்புள்ள கூட்டாட்சி வேண்டுமா—இதில் —எது

ஆந்திரர் கேரளர் கன்னடரோடென்றும்
அல்லல்படும் நிலை வேண்டுமா—அல்லது
சாந்தம் சத்யம் நிறைந்த தமிழர்தம் நிலைக்கேற்ற
தனியாட்சி தழைத்திட வேண்டுமா—இதில் —எது

பரந்த தேசாபிமானமா—இனப்
பகையை வளர்க்க மோகமா—என்றும்
நிரந்தரச் சுகபோகமா—அல்லது
நீங்காத மனஸ்தாபமா—இதில் —எது

செந்தமிழ் மொழிப் பண்பை
திராவிடப் பெருஞ் சேற்றில்
சீரழித்திடச் சதித் திட்டமா? அல்லது
சொந்தத் தமிழ்மொழியில் சுதந்திரத் தமிழாட்சி
தோன்றுவதில் உனக்கு இஷ்டமா—இதில் —எது

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the
Kannagi Achagam, 1-29, Irusappa Garmani Street,
Triplicane, MADRAS - 5.

தங்க நகைகள்

கே. ஆர் & சன்ஸ்

பெரியகடை வீதி, கோயமுத்தூர்